# பாரதமணி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
295, லிங்க செட்டி தெரு, மதராஸ்

வருஷ சந்தா ரூ. 4

| | | |
|---|---|---|
| மாலை 4 | ஞாயிறு 7-7-40 விக்ரம ஞு ஆனிமீ 24உ | முத்து 11 |

## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம். |
|---|---|---|
| உலக விஷயம் ... ... ... ... | | 266 |
| காரணமற்ற பீதி ... ... ... ... | பாநு | 268 |
| பிரிட்டன் கடமையைச் செய்யவேண்டும் ... ... | ஆர்தர் மூர் | 270 |
| இந்தியா தாக்கப்படுமா? ... ... ... | கோட்மன் | 271 |
| வைத்திய சாஸ்திரம் ... | ராவ்பகதூர் டி. எஸ். திருமூர்த்தி | 272 |
| பராசக்தியின் குழந்தை ... ... ... | ராஜலக்ஷ்மி | 276 |
| திருப்பதி யாத்திரை ... ... ... | ஆர். கிருஷ்ணன் | 279 |
| நான் சொன்ன கதை ... ... ... | "சிற்பி" | 281 |
| எனது கிராம அனுபவம் ... ... ... | "காந்தன்" | 286 |
| குவலயானந்த சுபாஷிதம் ... ... | ய. மகாலிங்க சாஸ்திரி | 289 |
| சிறுவர்களின் தைரியம் ... ... | கே. எஸ். ராமானுஜம் | 291 |
| நட்பின் பெருமை ... ... | ஜி. கிருஷ்ணமூர்த்தி | 292 |
| ஹாலந்தின் இந்தியத் தீவுகள்... ... ... ... | | 295 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# உலக விஷயம்

உலகம் இவ்வளவு வேகமாகச் சுழலு மென்று யார் எதிர் பார்த்திருப்பார்கள்? திடீரென்று எவ்வளவு எதிர்பாராத சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன? பிரான்ஸ் இவ்வளவு சீக்கிரத்தில் சரணாகதி யடையு மென்பதும் அந்தச் சரணாகதி இவ்வளவு பரிபூரணமாக இருக்குமென்பதும் முதலில் யாருக்குத் தெரியும்?

பிரான்ஸின் பணிவால் மிகவும் நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கிறதென்பதை ராஜதந்திரிகள் ஒளித்துக் கூற விரும்பவில்லை. ஆனால் இந்தச் சோதனை பிரிட்டிஷ் மக்களின் ஆவேசத்தை அதிகமாக்கியிருப்பதைக் காண்கிறோம். சமீபத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி பேசிய தீரமான பேச்சில், முடிவு வரையில் பிரிட்டன் எதிர்த்து நின்று ஜெர்மனியைத் தோற்கடிக்கும் என்று கூறியிருக்கிறார். ஜெர்மனியின் எத்தகைய எதிர்ப்பையும் சமாளிக்கத் தயாராகயிருப்பதாகவும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் உதவியைக்கொண்டு முடிவில் ஜெர்மனியைத் தோற்கடிக்க முடியுமென்றும் அவர் கூறியிருப்பது சாம்ராஜ்யம் முழுவதிலுமுள்ள ஜனங்களின் அபிப்ராயத்தை எதிரொலி செய்வதாக இருக்கிறது.

இந்த நெருக்கடியான காலத்தில் தைர்ய மூட்டும் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. பிரஞ்சு சர்க்கார் சரணடைந்துவிட்டபோதிலும், பல தனிப்பட்ட பிரஞ்சு பிரமுகர்களும், இன்னும் பல பிரஞ்சு காலனிகளிலுள்ள ஜனங்களும் பிரிட்டனுடன் சேர்ந்து போராட முன் வந்திருக்கிறார்கள். பிரஞ்சு ஜெனரல் டிகால் பிரிட்டனுடன் சேர்ந்து போராட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியிருக்கிறார். இன்னும், பிரிட்டனில் யுத்த ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வருகின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக, பிரிட்டிஷ் படைகள் எதிரியின் கடற்கரையைப் பல இடங்களிலும் தாக்கி ஜெர்மன் ராணுவத்திற்குப் பலத்த சேதம் விளைவித்துவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மன் நகரங்களையும் தொழிற்சாலைகளையும் தாக்கிப் பலத்த ராணுவ, ஆயுத சேதம் விளைவித்துவருகின்றன. பிரிட்டிஷ் கடல்படைகள் மத்தியதரைக் கடலிலும் ஆப்பிரிக்காவிலும் எதிரிகளுக்குப் பலத்த சேதத்தை உண்டாக்கி யிருக்கிறார்கள்.

இப்படி யுத்தம் நடந்துகொண்டிருக்கும் வேளையில், ரஷ்யா கொஞ்சம் சிலுசிலுத்துப் பார்க்கிறது. லிதுவேனியா, லாட்வியா, எஸ்தோனியா—இந்த மூன்று நாடுகளிலும் ரஷ்யப் படைகள் புகுந்து தனக்குச் சாதகமான முறையில் அதன் சர்க்கார்களை மாற்றிக்கொண்டிருக்கின்றன. மேலும், இதுவரை ருமேனியாவுக்குச் சொந்தமான பெஸ்ஸரேபியா, பொகோவினா—இந்த இரண்டு பிரதேசங்களையும் ரஷ்யா பிடித்துக்கொண்டு விட்டது.

ஸிரியாகூட யுத்தத்தை நிறுத்திவிட்டதாகக் கேட்கிறோம். ஸிரியா, லெபனன்—இவ் விரண்டும் எதிரிகள் வசமானால் உடனே பிரிட்டிஷ் சர்க்கார், தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தலையிடப் போவதாகத் தெரிவித்து விட்டார்கள்.

கிழக்கே திரும்பினால், ஜப்பான் மிகவும் சுறுசுறுப்பாயிருப்பதைக் காண்கிறோம். இந்து சீனா வழியாகச் சைனாவுக்கு ஆயுத தளவாடங்கள் போவதாக ஜப்பான் குற்றம் சாட்டிற் றல்லவா? அது சம்பந்த

மாக, ஜப்பான் மீண்டும் குறை கூறி வரு கிறது. எச்சரிக்கையை லட்சியம் செய் யாமல் வழக்கம்போல் இந்து சைனு வழி யாக ஆயுதத் தளவாடங்கள் போகின் றன என்றும், அதை ராணுவ பலம் கொண்டு தடுக்கப் போவதாகவும் ஜப் பான் கூறிக் 'கண்காணிக்க' கப்பல்களை வேறு இந்தோ சைனுவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறதாம். ஜப்பானியப் படைகள் முன்னேறி, இந்தோ—சைனு எல்லைப் புறத்திலுள்ள ஓர் நகரத்தைக் கைப்பற்றி விட்டதாம். மலயாவிலும் ஹாங்காங்கிலும் நிலைமையை யொட்டி யுத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பிரிட்டன் யுத்த நடவடிக்கைகளைப் பார்த்தால், அவர்கள் அமெரிக்காவுடன் சேர்ந்துகொண்டு ஓர் கடற்படை ஒப்பந் தம் செய்துகொண்டுவிட்டதாகத் தோன்று வதாக ஜப்பானியப் பத்திரிகை கூறுகிறது. ஆனல் இதை லண்டனில் மறுக்கிறார்கள்.

ஸ்ரீ சர்ச்சில் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத் தின் ஒத்தாசையைக் கொண்டு போரிடப் போவதாகச் சொல்லியிருக்கிறாரல்லவா? சாம்ராஜ்யத்தின் 'நடுநாயகமான' இந்தி யாவின் உதவியைப் பெறவும், யுத்த ஏற் பாடுகளை அதிகரிக்கவும் என்ன முயற்சி கள் நடக்கின்றன என்று கவனிப்போம்.


26-ந் தேதி பார்லிமெண்டில் ஓர் புது இந்தியா மசோதாவை இந்தியா மந்திரி கொண்டு வந்தார். அதன் சாராம்சம் இது தான். யுத்த நெருக்கடியால் எதிர்காலத் தில் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் போக்கு வரத்து நின்றால், வைஸ்ராய் இந்தியா மந்திரியிடமிருந்து உத்தரவு எதிர் பார்க்காமலே ராஜ்யத்தை நிர்வாகம் செய்ய அனுமதி தரப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக, கட்டாய ராணுவ, சேவையை ஐரோப்பியர் விஷயத்தில் அமுலுக்குக் கொண்டுவர இந்திய சர்க்கா ருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக் கிறது. ஆனல் அரசியல் விஷயமாக இந்த சட்டம் ஒன்றையும் பாதிக்கவில்லை என்று ஸ்ரீ அமெரி தெளிவு படுத்தினர்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்தான் வைஸ்ராய் காந்திஜீயையும் ஜின்னவை யும் அழைத்தார். வைஸ்ராய்க்கும் நம் தலைவர்களுக்கும் என்ன பேச்சு வார்த்தை நடந்ததென்று ஒருவருக்கும் தெரியாது. ஆனல், மத்திய மந்திரி சபை யை விஸ்தரிக்கும் விஷயமாக பேச்சு நடந் ததாக வதந்தி இருக்கிறது. காரியக் கமிட்டி கூடி நிலைமையை ஆலோஜித்தது. காங்கிரஸ் கோரிக்கைக்குக் குறைவாகவே வைஸ்ராய் பிரேரணைகள் இருந்தனவென் றும், காங்கிரஸ் அவற்றை ஏற்காதென்றும் ஹேஷ்யம் இருக்கிறது. அப்படிக் காங் கிரஸ் தீர்மானம் செய்யுமானல், எதிர்கால அரசியல் மிகவும் தெளிவில்லாமல் இருக் கக்கூடும். காங்கிரஸ் எதிர்காலத் திட்டத் தைப் பற்றியோ, சர்க்காரின் யோசனை களைப் பற்றியோ, வருகிற வாரங்கள்தான் நமக்குத் தெரிவிக்கக் கூடும்.

## அறிக்கை

நமது அச்சாபீஸில் ஏற்பட்ட எதிர்பாராத, தவிர்க்க முடி யாத, சில அசௌகர்யங்களால், ஜூன் 16, 23, 30 தேதி "பாரதமணி" முத்துக்களை வெளிக்கொண்டுவர முடியவில்லை. அதற்குப் பதிலாக, ஜூலை 21-ம் தேதியன்று, மதம், வேதாந் தம், ஆத்மசக்தி—முதலிய அரிய விஷயங்கள் கொண்ட ஓர் விசேஷ முத்தைப் பிரசுரிக்கிறோம். பிரசுரம் தவக்கப்பட்டதற் காக சந்தாதாரர்கள் மன்னிப்பைக் கோருவதுடன், இனிமேல் இம்மாதிரி தவக்கம் நேராதென்று உறுதி கூறுகிறோம்.

மானேஜர்.




## காரணமற்ற பீதி

(பாலு)

தற்காலம் மேல்நாட்டில் நடக்கும் பயங்கரமான யுத்தமானது இங்குள்ள நம்மவர்களில் பெரும்பான்மையோருக்குப் பல விதமான சந்தேகங்களை உண்டாக்கி அதனால் பலவிதமான பயத்தையும் விளைவித்திருக்கிறது. அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பயமெல்லாம் தங்களிடமிருக்கும் ஜீவாதாரமாயுள்ள சொற்பப் பணத்தைப் பற்றிததான். இங்கிலாந்தில் பிரதம மந்திரி சேமபர்லேன் தன் ஸ்தானத்தைக் காலி செய்து அவருக்குப் பதிலாக வின்ஸ்டன் சர்ச்சில் அந்தப் பதவியை ஏற்றுக்கொண்டவுடன், அந்த தேசத்திலுள்ள பிரஜைகளும் அவர்களுக்குள்ள திரவியங்களும் தன்னுடைய பொறுப்பிலிருக்கின்றன என்று ஓர் பாதுகாப்பு அவசரச்சட்டம் ஏற்படுததியது, ஜனங்களின் பீதியை இந்த தேசத்தில் அதிகப்படுத்தி விட்டது.

முக்கியமாய் அவர்களுக்குப் போஸ்டாபீசுகளில் போட்டிருக்கும் பணத்தைப் பற்றி அதிகக் கவலையுண்டாகி வெகு துரிதமாய் அங்கிருந்து பணங்களை வாங்க ஆரம்பித்தார்கள். பாங்குகளில் போடப்பட்டிருந்த பணத்தையும் சிலர் வாங்க ஆரம்பித்தார்கள். பணத்தை வாங்குவதில் நோட்டாக வாங்கினால் அந்த நோட்டானது செல்லாமற் போய்விடுமோ என்ற பயம் பெரும்பான்மையோருக்கு ஏற்பட்டு வெள்ளி ரூபாய்களாகவே தாங்கள் வாங்க எத்தனித்தார்கள்.

விஷயம் சரிவரத் தெரியாமையினாலும் தங்களுக்கு ஜீவாதாரமாயுள்ள பணத்தைத் தாங்கள் இழந்து விடுவோமோ என்ற பீதியினாலும் அவர்கள் தங்களைத் தாங்களே வீணாகத் துன்புறுத்திக் கொண்டு கஷ்டப்படுகிறார்கள். பணத்தை வாங்கிக்கொண்டு வீட்டில் வைத்துக் கொண்டிருந்தால் அதைக் காப்பாற்றி வைத்துக்கொள்ள வேண்டுமென்ற பயம். நோட்டுக்களாகவே பணம் முழுவதும் இருந்ததேயானால் பிற்பட்டு நோட்டுகள் செல்லாமல் போய்விடுமோ வென்ற பயம். முழுவதும் வெள்ளி ரூபாய்களாகவே இருந்தால் அவைகளை அடக்கமாகவும் சாவதானமாகவும் வைத்துக்கொள்ளக் கூடாமைபற்றித் துன்பம். இம்மாதிரியான பலவித கஷ்டங்களுக்கு நமது ஜனங்கள் உட்பட்டு வீணாகத் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நமது இந்திய கவர்ன்மெண்டார் இதை அறிந்து சென்ற மேமீ 30-ந் தேதியன்று ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையில் தாங்கள் ஜனங்களின் சொந்த ஐவேஜிகளைத் தங்களுடைய சுவாதீனத்திற் குட்படுத்தவாவது அல்லது பறிமுதல் செய்துகொள்ளவாவது சட்டம் ஏற்படுத்த உத்தேசமில்லையென்றும், ஜனங்கள் யோசனை செய்யாமல் தங்கள் போஸ்டாபீசுகளிலும் மற்றுமுள்ள பாங்குகளிலும் போடப்பட்டிருக்கும் தொகைகளை அவசரப்பட்டு வாங்கிக்கொள்வதானது, தங்களுக்குத் தாங்களே வீண் நஷ்டத்தையும் அசௌகரியத்தையும் உண்டாக்கிக் கொள்கிறார்களென்றும் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டிருக்கிறது.

இம்மாதிரி ஜனங்களின் பீதிக்கு முக்கிய காரணம், நமது சர்க்கார் கரன்ஸி நோட்டுக்கள் வெளியிடுவதற்கு இன்ன

செக்யூரிடி வைத்திருக்கிறார்கள் என்றவிஷயம் தெரியாமையினால்தான். இதற்குமுன்னால் சர்க்காரே கரன்ஸி நோட்டுகள் அச்சிட்டு வெளியிட்டுக்கொண் டிருந்தார்கள். இப்போது ரிசர்வ் பாங்க் அதிகாரிகளிடம் அந்த வேலையை ஒப்படைத் திருக்கிறார்கள். இந்த ரிசர்வ் பாங்கினால் வெளியிடப்பட்டிருக்கிற ஒவ்வொரு கரன்ஸி நோட்டிலும் "மத்திய சர்க்காரால் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது" என்று நோட்டின் தலைப்பில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஜனங்கள் இதை முக்கியமாய் கவனிக்க வேண்டும்.

தவிர, ஒவ்வொரு நோட்டிலும் அதில் கண்ட தொகையைக் கேட்டமாத்திரத்தில் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறது. அதாவது, ஒருவர் பாங்கில் தன் பேரால் உள்ள நடைமுதல் கணக்கில் போட்டு வைத்திருக்கும் பணத்தைத் தனக்கு எந்த க்ஷணம் தேவையோ அப்போதே எவ்வளவு துரிதமாய் வாங்கிக் கொள்ளக்கூடுமோ, அதேமாதிரி இந்தக் கரன்ஸி நோட்டுகளில் கண்டவைகளையும் அவ்வளவு துரிதமாய் வாங்கிக்கொள்ளலாம் என்று ஆகிறது.

மேற்கூறியபடி, மத்திய சர்க்கார் செய்திருக்கும் உத்திரவாதமானது கேவலம் வாக்கு நாணயம் மட்டில் அல்ல. ரிசர்வ் பாங்க் அதிகாரிகளால் மொத்தம் எவ்வளவு ரூபாய்க்கு நோட்டுக்கள் அச்சிடப்பட்டு ஜனங்களின் உபயோகத்திற்கு வெளியிடப்பட்டிருக்கிறதோ அவ்வளவு ரூபாய்க்கும் செக்யூரிடியாக-அதாவது ஈடாக-பவுன் நாணயங்கள், பவுன் கட்டிகள், வெள்ளி நாணயங்கள், கவர்ன்மெண்ட் செக்யூரிடிகள், இவைகளை வைத்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு வாரமும் ரிசர்வ் பாங்க் அதிகாரிகளால் பிரசுரிக்கப்படும் சங்கிரகக் கணக்கிலிருந்து மேற்சொல்லிய விஷயம் நன்கு விளங்கும்.

ரிசர்வ் பாங்க் அதிகாரிகள் தாங்கள் செய்துவரும் வேலைகளைத் தனித்தனியே இரண்டு இலாகாவாகப் பிரித்திருக்கிறார்கள். ஓர் இலாகா தாங்கள் சர்க்கார் சார்பாக வேலை செய்துவரும் கரன்ஸிநோட்டுகளைச் சார்ந்தது. மற்றொரு இலாகாவானது தாங்கள் செய்துவரும் பாங்க் வரவு—செலவுகளைச் சார்ந்தது. இந்த இரண்டு இலாகா சம்பந்தமான கணக்குகளும் தனித்தனியே அவர்களால் ஒவ்வொரு வாரமும் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. கரன்ஸி நோட்டு சம்பந்தமாய் கடைசியாக அவர்கள் பிரசுரித்திருக்கும் 14-6-40 தேதிக் கணக்குப் பிரகாரம் அவர்களால் பல வழிகளில் வெளியிடப்பட்டிருக்கும் கரன்ஸி நோட்டுக்களின் மொத்தத் தொகை ரூ. 262,01,8800. இதற்குஈடாக அவர்கள் வைத்திருப்பவை பின்வருமாறு :—

| | |
|---|---|
| பவுன் நாணயங்களும் பவுன் கட்டிகளும் (இந்தியாவில்) ... | 41,54,46,000 |
| இந்தியாவுக்கு வெளியில் .... | 2,86,98,000 |
| ஸ்டர்லிங் செக்யூரிடிகள் ... | 129,50,11,000 |
| வெள்ளி ரூபாய்கள் ... | 39,50,69,000 |
| இந்தியா கவர்ன்மெண்ட் ரூபாய் செக்யூரிடிகள் ... | 48,59,64,000 |
| ஆகமொத்தம் ... | 262,01,88,000 |

புழங்கி வருகிற கரன்ஸி நோட்டுகளுக்குப் பக்காவான ஈடானது ரிசர்வ் பாங்கர்களால் மேற்காட்டியபடி வைத்து வைக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் இதற்கு விலை குறைந்துவிடுமோ வென்ற பயம் ஜனங்களுக்கு ஏற்பட ஒருவிதக் காரணமுமில்லை.

சமீபத்தில் சர்க்கார் வெளியிட்டிருக்கும் அறிக்கை மூலமாய் தங்களுடைய முக்கிய உபயோகத்திற்காக வேண்டிய ரூபாய்களுக்கு மேற்கொண்டு கையில் ஏராளமான வெள்ளி நாணயங்களை வைத்திருப்பவர்களுக்கு 5 வருஷம் வரையில் தண்டனை விதிக்கப்படும் என்ற விஷயத்தையும் ஜனங்கள் கவனித்திருப்பார்கள்.

# பிரிட்டன் கடமையைச் செய்யவேண்டும்

(ஸ்ரீ ஆர்தர் மூர், ஆசிரியர், "ஸ்டேட்ஸ்மன்")

இந்தியாவுக்குப் பகிரங்கமாகக் குடியேற்ற நாடு அளித்தாகி விட்டது என்று தெரியப்படுத்தும் வரை ஒவ்வொரு நாளும் நாம் போரில் தோற்ற நாளாகும். நமது கவசத்திலுள்ள ஓர் குறையை நாம் போக்கிக்கொண்டு யுத்தத்திற்குத் தயாராக்கிக் கொள்ளவேண்டும். அதாவது, சாம்ராஜ்யத்திற்கு நடுநாயகமாகவும், 40 கோடி ஜனங்களின் உயிராக உள்ளதும், கணக்கற்ற ஆட்பலமும் பொருட் பலமும் உள்ளதுமான இந்தியா, குடியேற்ற நாடாகக்கூட இல்லையே. இந்தியா பிரிட்டனுக்கு உதவிசெய்ய ஆசைப்படுகிறது; உலகில் எதிர்காலத்தை மாற்றி அமைக்க தானும் மற்ற தேசங்களுடன் ஒத்துழைக்க ஆசைப்படுகிறது; தன்னைத் தற்காப்பு செய்துகொள்ள விரும்புகிறது. ஆனால் தேசம் என்று சொல்லிக்கொள்ள அதற்கு அந்தஸ்து இல்லை. கானடா, ஆஸ்திரேலியா, நியூஜீலாந்து--இத் தேசங்களின் அந்தஸ்துகூட அதற்கு இல்லை. ஹிட்லர், முஸோலினிபோன்ற கொள்ளைக்காரர்கள் பிரிட்டனைப் பணிய வைத்துவிட்டால், இந்தியாவைப் பிடித்துப் பங்கு போட்டுக்கொள்ள சட்ட பூர்வமான உரிமை ஏற்படும்படி அடிமை நாடாக வல்லவோ இருக்கிறது? இது சகிக்கமுடியாத நிலைமை. இதற்கு ஒரு முடிவு ஏற்படவேண்டும்.

இந்திய உள்நாட்டு சிக்கல் தீர இடையூறாக இருப்பவர்கள் காந்திஜியும் ஸ்ரீ ஜின்னாவும்தான் என்று கூறப்படுகிறது. என்னுடைய பதில் என்னவென்றால், முதலில் பிரிட்டன் தன் கடமையைச் செய்யட்டும். அதாவது, இந்தியா சுயேச்சையுள்ள குடியேற்ற நாடு என்பதை பிரகடனம் செய்யட்டும். அதற்குப் பிறகு, எனது நண்பர்கரான மகாத்மா காந்தியும், ஜின்னாவும், பொதுஜன அபிமானம் பெற்றதும், கட்டுப்பாடுள்ளதுமான சர்க்காரை அமைப்பதில் வைஸ்ராய்க்கு உதவி புரிவார்கள் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது, முஸ்லிம், ஹிந்து, ஐரோப்பியன்—என்று வகுப்புவாதப் பேச்சுப் பேச இது சமயமல்ல.

நாம் எல்லோரும் இதுவரை கொஞ்சம் ராஜீய சுயேச்சையையும் வாக்கு சுதந்தரத்தையும் பெற்றிருந்தோம். அவை இப்போது ஆபத்தில் இருக்கின்றன. நாம் இப்பொழுதும், எப்பொழுதும் இரத்தேசத்தின் நியாயமுள்ள, தேச பக்தி வாய்ந்த, உண்மையான பிரஜைகளாக இருக்கவேண்டும். இப்போது பிரிட்டனுக்கும் இந்தியாவுக்குமுள்ள சச்சரவை உடனே தீர்க்கவேண்டியது அவசியமாக எனக்குத் தோன்றுகிறது. இப்போது காங்கிரஸும் முஸ்லிம் லீகும் யுத்த கமிட்டிகளைப் பகிஷ்கரித்து, தனித்தனியாக தொண்டர் படை நிறுவுவதைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். இது பைத்தியக்காரத்தனத்தைத் தவிர வேறில்லை. இது தீரவேண்டுமென்றால், பிரிட்டன் தனது கடமையைச் செய்யவேண்டும்.

இந்தியாவைத் திருப்தி செய்து, மகாகனம் சாஸ்திரி, பண்டித நேரு போன்ற திறமை வாய்ந்த சொற்பொழிவாளர்கள் உள்ள ஒரு இந்தியக் கோஷ்டியை அமெரிக்காவுக்கு அனுப்பி, உலகைக் காப்பாற்ற நடைபெறும் யுத்தத்தில் இந்தியாவுக்கு உதவும்படி கோரினால், உடனே பலன் ஏற்படும்.

# இந்தியா தாக்கப் படுமா?

(ஜான் கோட்மேன்)

ரஷ்யா இந்தியாமீது படையெடுப்பதில் எவ்வளவு இயற்கையான கஷ்டங்கள் இருக்கிறதென்பதை, தேச படத்தைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். ரஷ்யா இந்தியாமீது படையெடுப்பதென்றால், அது ரஷ்ய மத்ய ஆசியப் படையினாலும், காகஸ் பிரதேசத்திலுள்ள செங்கொடிப் படையினாலும் தான் முடியும். இரண்டாவது சொல்லப் பட்ட படை, இந்தியாவிலிருந்து ஆப்கனிஸ்தானம், பலுசிஸ்தானம் போன்ற மலைநாடுகளால் பிரிக்கப் பட்டிருக்கிறது,

மத்ய ஆசியாவிலுள்ள ரஷ்யப் படையைக் கவனிப்போம். இந்தப் படைக்கும் ஹிந்து குஷ் மலைக்கும் நடுவில் தற்கால ராணுவம் கடக்க முடியாத மலைச்சரிவுகள் இருக்கின்றன. எதிர்ப்பே இல்லாவிட்டால் கூட, எந்த தற்கால சைன்யமும் இந்த மலைநாட்டைக் கடக்க முடியாது. அந்த படை முன்னேற வேண்டுமென்றால் பாரசீகம் வழியாகத்தான் வரவேண்டும்.

பாரசீக எல்லைப்புறம் வழியாக சில காலமாக ரஷ்யாதான் போக்கு வரவு சாதனங்களை அபிவிருத்தி செய்து வருகிறது என்பது நமக்குத் தெரியும். ஆனாலும் தனக்குத் தேவையான ஆகாரம், எண்ணெய் இவைகளைக் கூடவே கொண்டுவர எந்தப் படைகளுக்கும் இங்கே சாதனம் கிடையாது. எந்த நிமிஷத்தில் ரஷ்யா, பர்ஷியாமீது, ஆப்கனிஸ்தானத்தின்மீது படையெடுக்கிறதோ, அந்த நிமிஷத்தில், அந்தந்த தேசத்தில் உள்ள ராணுவங்களால் அது தாக்கப்படும். இதனால், மிகவும் பலமுள்ள இந்திய ராணுவத்தை அது சந்திக்க வருவதற்குள் அதன் பலமும் மனோ தைர்யமும் சிதறிப் போய்விடும்.

எப்படிப் பார்த்தாலும், இந்தியாமீது ரஷ்யா படையெடுக்க வேண்டுமென்றால், இரண்டு முகம்மதிய நாடுகளில் நடுநிலைமையை மீறினால்தான் முடியும். துருக்கிக்கு மேற்கே சிரத்தை இருக்கிறது. அந்தப் பிரதேசத்தில் ரஷ்யா ஆக்கிரமிக்குமானால், துருக்கி சும்மாயிராதென்று நன்றாகத் தெரியும்.

தேச படத்தை மற்றொரு தடவை பார்த்தால், இரான், இராக், முதலிய நாடுகளின் எந்த உரிமையையும் காக்க துருக்கி எவ்வளவு பலமான இடத்தில் இருக்கிறதென்பது தெரியவரும். துருக்கியை முதலில் செயலற்றதாகச் செய்யாமல், இரான், ஆப்கனிஸ்தானம் முதலிய நாடுகளை ரஷ்ய சர்க்கார் சண்டைக்கு இழுக்குமானால், அது முற்றிலும் பைத்தியக்காரத் தனத்தைத் தவிர வேறில்லை.

ஆனால் துருக்கி ஓர் பலமான தேசம். பிரிட்டனும் பிரான்ஸூம் அதன் சிநேகிதர்கள். ரஷ்யா மத்ய ஆசியாவில் ஆக்கிரமித்தால் அவர்கள் தரையிலும், ஆகாயத்திலும், கடலிலும் ரஷ்யாவைத் திருப்பித் தாக்குவார்கள். ரஷ்யா தன் சரிதையில் கண்டறியாத ராணுவத் தோல்வி அடையும்படி இருக்கும்.

ராணுவ விஷயங்கள் இருக்கட்டும்; ராணுவ சப்ளையைப்பற்றி என்ன? ரஷ்யர்களுக்குப் போரிட வேண்டிய யுத்த தளவாடங்களும், எண்ணை, பெட்ரோல் எங்கே கிடைக்கும்? அந்த ஸப்ளை இப்போது அவர்களுக்குக் கிடையாது. அது அவர்களுக்கு வராது. வந்தாலும் அதை இந்தியாவுக்குக் கொண்டு வரமுடியாது.

ஆப்கனிஸ்தானமோ, இரானோ படையெடுக்கப்பட்டால், அவை யுத்தம் செய்யும். ரஷ்ய படையெடுப்பை உணர்ந்து இந்தியர்கள், சரித்திரத்திலேயே கேட்டறியாதபடி ஒன்று சேர்வார்கள். அப்படி ஒன்று பட்ட இந்தியா, ரஷ்ய ஆக்கிரமிப்பை—தப்பித் தவறி அது இந்தியாவின் வாசற்படிக்கு வந்துவிட்டால்—எதிர்த்து நிற்கும்.

எல்லாவற்றையும்விட நாம் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம் ரஷ்யாவிலுள்ள பொதுவுடைமை சர்க்காரைப்பற்றித் தான். பின்லந்து யுத்தத்தில் அதன் கையாலாகாத் தனம் விளங்கிவிட்டது. அது பழைய 'ஸார்' ரஷ்யாவின் அழுகிப்போன, உதவாக்கரை சாயல். அப்படிப்பட்ட ஓர் சர்க்கார், நெபோலியனால்கூடச் சாதிக்க முடியாத ஓர் வேலையை முயற்சிக்காது. இந்தியாமீது ரஷ்யா படையெடுக்குமென்று சொல்வதே ஓர் முட்டாள்தனம்.

# வைத்திய சாஸ்திர அபிவிருத்தியும் சுகாதார நலன்களும்

[ராவ் பகதூர் டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி]

மனிதன் உலகத்தில் தோன்றின நாள் முதல் கொண்டே அவனுடன் நோய்களும் கூடவே வந்திருக்கின்றன. ஆனால், முன் காலத்தவர்கள் "தலைவிதியாலேயே வியாதி வருகிறது, பேய் பிசாசங்களும் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன, இதிலிருந்து தப்ப முடியாது, இதற்கு உட்பட்டுத்தான் ஆகவேண்டும்" என்ற கொள்கையுடனிருந்தனர். இக்காலத்திலோ அநேக வியாதிகளின் காரணங்கள் நமக்கு வைத்திய ஆராய்ச்சியின் மூலமாகத் தெரியவந்திருக்கிறது. அதன் மூலமாகத் தொத்து முதலான வியாதிகளை வரவொட்டாமல் தடுக்க சர்க்கார் எவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்டாலும், பொதுமக்கள் எல்லோருடைய ஒத்தாசையும் உழைப்புமின்றிச் சர்க்கார் மட்டும் அவ்வியாதிகளை வேரோடு ஒழித்துவிட முடியாது.

### சரீரத்திற்கு எமனாகவிருக்கும் வியாதிகளை பின்வருமாறுபிரிக்கலாம்.

I. பிரத்தியேகமாய் அவைகளுக் கென்று ஏற்பட்ட தனி முறைகளால் தடுக்கப் படக்கூடிய வியாதிகள்.

உதாரணமாக:—பெரியம்மை, வைசூரி, ரணஜன்னி, நாய்கடி, மேகநீர் சம்பந்தமான வியாதிகள் முதலியன.

II. மலத்தின் மூலம் பரவும் வியாதிகள்.

உதாரணம்:—டைபாயிட் என்ற விஷ ஜுரம். அதாவது சனிபாதசன்னி யென்பது. வாந்திபேதி, சீதபேதி, கொக்கிப் புழு வியாதி முதலியன.

III. எச்சில், சளி முதலியவைகளின் மூலமாகப் பரவும் வியாதிகள்.

உதாரணம்:—க்ஷயம், நிமோனியா என்னும், குலை ஜுரம், இன்புளுயென்சா வென்னும் ஜுரம், சிச்சிலிப்பை, அம்மை, ஜலதோஷம் முதலியன.

IV. பூச்சிகளினால் பரவும் வியாதிகள்.

(a) கொசுக்களின் மூலம் - மலேரியா என்னும் முறைக்காய்ச்சல், யானைக்கால் ஜுரம், கைகால் முடக்கி ஜுரம் முதலியன.

(b) ஈக்களின் மூலம்-மூர்ச்சை வியாதி.

(c) தெள்ளுப்பூச்சியின் மூலம்-ப்ளேக்.

(d) எலிகளால் பரவும் வியாதிகள்-ப்ளேக், எலிக்கடி ஜுரம், தொத்து காமாலை முதலியன.

(e) உண்ணிகளால்-அடுத்தடுத்துவரும் ஜுரம்.

(f) பேன்களினால்-டைபஸ் என்னும் ஜுரம்.

V. இதர வியாதிகள்.

கால்நடைகளின் வியாதிகள், குஷ்டம், நண்டுச் சிலந்தி முதலியவை. இவைகளில் பெரும்பாலானவற்றைத் தடுக்க வழி கண்டுபிடித்தாயிற்று. இது சம்பந்தமாக முக்கியமான சில வியாதிகளைப்பற்றிச் சுருங்கச் சொல்ல விரும்புகிறேன்.

I. 1. வைசூரி என்பது எல்லோரும் அறிந்த வியாதி. அம்மை குத்திக்கொண்டால் இதை வரவொட்டாமல் தடுக்கலாம் என்பதும் இப்போது எல்லோரும் ஒத்துக்கொண்ட விஷயம். வைத்திய சாஸ்திரத்திலேயே முதன் முதலாக வியாதியைத் தடுக்கும் முறையைக் கண்டுபிடித்தது வைசூரியில்தான். அம்மை குத்திக் கொள்வதால் வைசூரியைத் தடுக்க உடம்பில் சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. இதற்கு ஆட்சேபணையே கிடையாது.

பாருங்கள்! ஒரு காலத்தில் மிகவும் கொடியதென்று கருதப்பட்டு உலகமெங்கும் பரவியிருந்த இந்த வியாதி, இப்போது கட்டாயமாக அம்மை குத்திக் கொள்வது என்ற ஏற்பாட்டினால், முன்

னேற்றமடைந்த எல்லா நாடுகளிலும் மறைந்தே போய்விட்டது. அம்மைகுத்திக்கொள்ளாதிருந்த காலத்தில் 100க்கு 5 பேர்கள்கூட வைசூரியால் பீடிக்கப்படாமலில்லை. வைசூரி தாக்கப்பட்டவர்களில் கால்வாசிக்குக் குறையாமல் எமனுக்கு இரையாகிக்கொண்டிருந்தார்கள். அம்மை குத்திக்கொண்டால் வைசூரி வராமல் தடுக்கலாம் என்ற மர்மத்தைக் கண்டு பிடித்த கௌரவம், "ஜென்னன்" என்பவருக்கே உரியது. அவர் அதி நுட்ப ஆராய்ச்சியால் பசுக்களுக்குண்டாகும் வைசூரியின் பாலைக்கொண்டு மனிதனுக்கு வரும் வைசூரியைத் தடுக்கலாம் என்பதை நிரூபித்தார்.

வைசூரியைத் தடுக்க ஒரே வழிதான் உண்டு. அதாவது, அம்மை குத்திக்கொள்வது. வைத்திய சாஸ்திரத்திற்கும் அனுபவத்திற்கும் பொதுஜன நன்மைக்கும் ஏற்றது இதுதான். இந்த வியாதிக்கென்றே பிரத்தியேகமாய் ஏற்பட்ட திருப்திகரமான முறை.

நோயாளியைத் தனியே அல்லது அப்புறப்படுத்திவைப்பதும், மருந்துகளால் வீடு, உடை முதலியவைகளைச் சுத்தப்படுத்துவதும், வியாதி பரவாமல் தடுக்கும் முறைகளில் இரண்டாவது பக்ஷமாகத்தான் சொல்லவேண்டும். சரியான முறையில் அம்மை குத்திக்கொண்டால் வைசூரி எத்தேசத்திலும், எக்காலத்திலும் தலை காட்டாது.

## 2. நாய்கடி வியாதி

வெறிகண்ட நாய் கடிப்பதால் இந்த நோய் மனிதருக்கும், நாய் முதலான மற்ற பிராணிகளுக்கும் உண்டாகிறது. வெறிபிடித்த மிருகங்களின் எச்சில் காயங்களின்மேல் பட்டாலும் இந்த வியாதி தொத்தும். இவ்வியாதியை உலகத்தில் அநேக பாகங்களில் காணலாம். ஆனால் ஆஸ்திரேலியாவில் மட்டும் இது இருந்ததேயில்லை. டென்மார்க், ஸ்வீடன், நார்வே முதலிய தேசங்களில் சென்ற 50 வருஷங்களாகக் கிடையாது. பரீட்சை செய்து நாய்களை உட்பிரதேசங்களுக்கு அனுப்புவதால், தீபகற்ப நாடுகளிலும், சமுத்திரத்தினுல் சூழப்பட்ட நாடுகளிலும் இவ்வியாதியைத் தொலைத்துவிட்டார்கள். உதாரணமாக, இது இங்கிலாந்தில் கிடையவே கிடையாது. மனிதனுக்கேற்படும் மற்றைய கொடியநோய்களோடு ஒப்பிடும்போது இது அபூர்வமானதென்றே சொல்லவேண்டும்.

நாய்களைச் சரியான முறையில் அடக்கி வைப்பதால் வியாதி வரவொட்டாமல் தடுக்கலாம். நாய் கடித்துவிட்டபிற்பாடும் 'பாஸ்டியூர்' முறையில் முன்சிகிச்சை செய்துகொள்வதால் வியாதியை முதிரவிடாமல் தடுக்கலாம். இந்த முறை முதன் முதலாக 1883–1884-ம் வருஷங்களில் கோப்பன்ஹேகனில் நடந்த சர்வதேச சங்கத்திலும், பாரிஸில் நடந்த பிரெஞ்சு அக்காடெமியிலும் வெளியிடப்பட்டது. நாய்க்கடி விஷத்தால் இறந்த குழி முயல்களின் முள்ளந்தண்டுக் கொடியை குழம்பாகச் செய்து அதன் சத்தை ஊசி மூலமாக இஞ்செக்ஷன் செய்கிறார்கள். இப்போது இந்த சிகிச்சை செய்துகொள்வதற்குக் குன்னூருக்குப் போகவேண்டிய அவசியமில்லை. முக்கியமான ஆஸ்பத்திரிகளுக்குத் தபால் மூலமாகவே மருந்து அனுப்பிவிடுகிறார்கள். வசிக்கும் ஊர்களுக்குச் சமீபத்தில் இருக்கும் பெரிய ஆஸ்பத்திரிகளிலேயே இப்போது இந்த வியாதிக்கு சிகிச்சை செய்யப்படுகிறது.

இந்த வியாதி முதலில் நாய்களுக்கே ஏற்படுவதால், நாய்களாலும், நாய் வர்க்கத்தைச் சேர்ந்த மிருகங்களாலுமே இந்த வியாதி நிலைபெற்றுவருகிறது. சட்ட முறைகளைக் கைக்கொள்வதால் இதைத் தடுக்கலாம். நாய்கள் இறக்குமதியாவதைக் கட்டுப்படுத்துவதற்கும், தெரு வீதியில் காப்பாற்றுவார் இன்றித் திரியும் நாய்களை பவுண்டில் அடைப்பதற்கும், லைசென்சு இல்லாத நாய்களைக் கொலவதற்கும், சட்ட முறைகளைக் கையாண்டால் இவ்வியாதியை அடியோடு இல்லாமலே செய்துவிடலாம். காரணத்தைச் சரியாய்த் தெரிந்துகொள்ளாமல் நாய்களிடத்து இரக்கங் காட்டுவது பிசகு. சொந்தக்காரர்கள் இல்லாது தெருவில் திரியும் நாய்களைக் கொல்

வது நாய் வர்க்கத்துக்கே நல்லது என்பதைச் சாதாரண ஜனங்கள் தெரிந்து கொள்வதில்லை. இங்கிலாந்து தேசத்தில் நாய்களுக்கு வாய்மூடி போடவேண்டுமென்ற நிபந்தனையை அமுலுக்குக் கொண்டுவந்த இரண்டு வருஷங்களிலேயே இந்த வியாதி அடியோடு போய்விட்டது.

### 3. மேக ரோகங்கள்

ரோகங்களில் மிகக் கொடியவையென நியாயமாகவே இவை கருதப்படுகின்றன. தடுப்பாரின்றி இவ்வியாதிகள் ஏகமாய்ப் பரவியிருப்பதால் ஒருவன் மாத்திரம் அல்ல, அவன் குடும்பமும் அவர்களைச் சார்ந்த சமூகமே சீர்குலைந்துவிட ஏதுவாகிறது. இவ்வியாதிகளைத் தடுப்பது எப்படியென்பது முன் சிகிச்சை சாஸ்திரத்தில் பெரிய பிரச்னையாயிருந்து வருகிறது. இவைகளையும் மற்றைய தொத்து வியாதிகளைப்போலவேதான் பாவிக்க வேண்டுமென்பதை இப்போதுதான் எல்லோருக்கும் தெரியவருகிறது. ஆனால் இவைகளைத் தடுப்பது என்பது மெதுவாகத்தான் முடியும். ஏனென்றால், மற்றைய வியாதிகளைவிட இவைகளை ஒழிப்பதில் கஷ்டங்கள் அநேகம், அதிகம்.

சர்க்காருக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று ஏற்பட்டுள்ள வியாதி ஜாப்தாவில் இவைகள் இன்னம் சேர்க்கப்படவில்லை. சில நகரங்களில் இந்த வியாதியால் அவஸ்தைப்படுபவர்களின் கணக்கையும் மற்ற எல்லாத் தொத்து வியாதிகளையும் சேர்த்து அவைகளினால் பீடிக்கப்படுகிறவர்களையும் ஒப்பிட்டால் இதற்குட்பட்டவர்களே அதிகம் எனக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

### இவைகளில் முக்கியமானவை

மேக ரணம், (Syphilis) மேகவெட்டை. (Gonorrhoea) நல்ல வேளையாக இவை இரண்டையுமே தடுக்க மார்க்கமுண்டு. மற்றெல்லா வியாதிகளைப் பார்க்கிலும் மேக ரணமே மனத்திற்கும் சரீரத்திற்கும் அதிக சஞ்சலத்தை ஏற்படுத்துகிறது. இதனுடைய கொடுமைக்கு எந்த வியாதியையும் ஈடாகச் சொல்ல முடியாது. என்றாலும் இதைத் தடுக்கலாம். பிணியாளியைச் சுகமாக்கியும் விடலாம்.

பூச்சிகளின் மூலமாகவாவது, நம்மைச் சுற்றிலுமுள்ள காற்றின் மூலமாகவாவது ஏற்படும் வியாதிகளைவிட, மனிதனிடமிருந்தே மனிதனுக்கு நேராக ஒட்டும் வியாதியைத் தடுப்பது மிகவும் கஷ்டம் என்ற உண்மைக்கு இவ்வியாதியே சிறந்த உதாரணம். நம்மைச் சுற்றிலுமுள்ளவைகளையும், பூச்சிகளையும், மிருகங்களையும் நாம் ஒருவாறு கட்டுப் படுத்தலாம். ஆனால் மனிதனாலேயே சர்க்கார் ஏற்படுத்தப்பட்டிருப்பதால், அவர்கள் இஷ்டப்பட்டால் ஒழிய, சுகாதார கட்டுப்பாடுகளும், சட்டங்களும் நிர்மாணிக்க முடியாது.

மேக ரணம் சமூகத்தில் எல்லாத் தரத்தாருக்கும் உண்டு. ஆரம்பத்தில் இந்த வியாதிக்கு இரையானவர்களே பைத்தியம்பிடித்தவர்களில் 100-க்கு 10 முதல் 35 வரையில் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். குழந்தைகளின் மந்த புத்திக்கும் சரீர பலமின்மைக்கும் இதுவே காரணம். இது வந்த சில காலங்களுக்கெல்லாம் சுவஸ்தமடையாத சில நரம்பு சம்பந்தப்பட்ட வியாதிகள் ஏற்படுகின்றன. ஹிருதயம் பாதிக்கப்படுகிறது. நாடிக்குழாய்களும் கெடுதல் அடைகின்றன. 100-க்கு 50 கர்ப்பங்கள் சிதைத்து போகின்றன. ஆயுளை மூன்றில் ஒரு பங்காகக் குறைத்துவிடும். மனிதன் வேலை செய்ய அசக்தனாகிவிடுகிறான். இதனால் ஏற்படும் கஷ்டங்கள் இன்னும் பல. என்றாலும் இந்த, வியாதிகளை வைத்திய சாஸ்திர முறையில் தடுக்கலாம்.

ஆரம்பத்திலேயே இதைக்கண்டு பிடித்து உடனேயே சிகிச்சை செய்ய வசதிகள் ஏற்படுத்தினால் சுகாதார இலாகாக்காரர்கள் இந்த வியாதி பரவுதலை அடக்கலாம். இவ்விஷயத்தில் மேனாட்டார் அதிக முன்னேற்ற மடைந்திருக்கின்றனர்.

பொது ஜன சுகாதார விஷயமாக நோக்கும் பொழுது, வெள்ளை நோயை மேக ரணத்துக்கு எவ்விதத்திலும் குறைந்த

தல்ல என்றே சொல்ல வேண்டும். சிச்சிலிப்பை அம்மைக்கு அடுத்தபடியாக, கடுமையான நோய்களில் அதிகம் பரவியிருப்பது இந்த நோயென்றே சொல்ல வேண்டும். இதுவும் சமூகத்தில் எல்லா ரகத்தாரிடத்திலும் உண்டு. அநேகமாக குருட்டுக் கண்களுக்கு இதுவே காரணம். சிசுக்களின் கண்கள் குருடாவதற்கு 100-க்கு 60 பேர்களுக்கு இதுவே காரணம். இதர வயதுகளில் 100-க்கு 10 வீதம் இதனால் குருடாகிறது. 100-க்கு 60, 70 பேருக்கு இதனால் ரண சிகிச்சை செய்யும்படி ஏற்படுகிறது. 100-க்கு 50 பேர் மலடியாகிறார்கள். பகிரங்கமாகவும் ரகசியமாகவும் திரியும் எல்லாப் பொது ஸ்திரீகளிடத்தும் இது கொண்டிருப்பதால், இதனால் சொல்ல முடியாத தீங்குகளும் கஷ்டங்களும் சம்பவிக்கின்றன. இதர தேசங்களில் பொது ஸ்திரீகளைப் பரீட்சை செய்து அவர்களுக்கு சிகிச்சை செய்து கொள்ள தூண்டும்படியான வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதனால் அந்நாடுகளில் இவ்வியாதி ஒருவாறு மட்டுப்பட்டிருக்கிறதெனச் சொல்லலாம்.

FOR

**BLOCKS**

of all Varieties

**POPULAR PROCESS**

132, BROADWAY,

Mannady P.O., G. T., Madras.

**முத்துமாலை**

•

பாரத மணியின் 26 முத்துக்கள் ஒன்றாக கோக்கப்பட்ட முதல் மூன்று மாலைகள் பைண்டு வால்யூம்களாகத் தயாராகி இருக்கின்றன. ஒவ்வொன்றின் விலையும் இரண்டே ரூபாய்தான். இன்றே உங்கள் மாலையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# பராசக்தியின் குழந்தை

[ராஜலக்ஷ்மி, பம்பாய்]

அன்று தீபாவளி. மக்களனைவரும் தங்கள் சக்திக்கேற்றவாறு பண்டிகையைக் களிப்புடன் கொண்டாடி இன்பமுற்றிருக்கும் நாள். குழந்தைகள் குதூகலத்துடன் பட்டாசுக் கட்டுகளைக் காலி யாக்கிக் கொண்டும் பக்ஷணங்களைத் தின்று கொண்டும் வேடிக்கையாகப் பொழுது போக்கிக்கொண் டிருந்தனர். பணக்கார வீட்டுக் குழந்தைகள் கொளுத்தி யெறிந்த பட்டாசுகளில் வெடிக்காதவற்றை ஆவலோடு பொறுக்கிக்கொண் டிருந்தனர் பட்டாசு வாங்கச் சக்தியற்ற ஏழைக் குழந்தைகள்.

தன்னறையில் துயரமே வடிவாய் உட்கார்ந்து கொண்டே சாளரத்தின் வழியாகத் தெருவில் நடக்கும் வேடிக்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்தான் சேகரன். குழந்தைகளின் கபடமற்ற முகத்தோற்றத்தைக் காணக்காண அவனுக்குத் தானு மொரு குழந்தையாகவே இருந்திருக்கக் கூடாதா என்ற எண்ணமுதித்தது. ஆம்! அவனிப்படி எண்ணுவதற்குக் காரணம், கடவுள் அவனுக்கொரு குழந்தையைக் கொடுக்காததே. அவன் மனைவி காமு பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாய் விளங்கினாள். இருவரும் தீபாவளிப்பண்டிகையைச் சம்பிரமமாகவே கொண்டாடினார்கள். இருந்தாலும்? பக்ஷணங்களைத் திருடித் திருடித் தின்னவும் வீடு முழுவதும் குப்பையைப் போட்டு அமர்க்களப்படுத்தவும் குதலை மொழிகளால் யாவரையும் மகிழ்விக்கவும் ஒரு குழந்தை யில்லையே யென்ற குறை சேகரனையும் காமுவையும் துக்க சாகரத்தில் அழுத்தியது. காமுவின் தெய்வபக்திக்கு அளவு கிடையாது. அவள் வேண்டாத தெய்வமில்லை. போகாத கோயிலில்லை. சுற்றாத அரசமரமில்லை. சர்வலோக சரண்யையாகிய அந்த மீனாக்ஷி கோயிலுக்கு நாள்தோறும் சென்று வருவாள். ஒவ்வொரு தீபாவளியின் போதும் "என் தாயே! அடுத்த தீபாவளிக்குள் ஓர் மகவை எனக்களிக்க மாட்டாயா?" என்று மனமுருக வேண்டுவாள். இம்மாதிரி எத்தனையோ தீபாவளிகள் ஓடிவிட்டன.

சேகரனும் காமுவும் அக்கம்பக்கத்திலுள்ள ஏழைக்குழந்தைகளுக்குப் பட்டாசுக் கட்டுகளையும் பக்ஷண வகைகளையும் தாராளமாக வழங்கினார்கள். சாயங்காலம் வழக்கம்போல் மீனாக்ஷியம்மன் தேவாலயத்துக்குச் சென்றனர். அன்று சோதனை போல் கோயிலுக்கு வந்திருந்த ஒவ்வொரு பெண்ணின் இடையிலும் ஒரு குழந்தை யிருக்கக் கண்டாள். அவளுக்குத் துக்கம் நெஞ்சை யடைத்தது. "அம்பிகே! இன்னும் உன் மனமிரங்கவில்லையா? காண்போரனைவரும் மலடி யென்று பழிக்கவா என்னைப் பெண்ணாகப் படைத்தாய்? தாயே! இனி என்னால் பொறுக்க முடியாது. அடுத்த தீபாவளிக்குள் எனக்கொரு பெண் குழந்தையையாவது எனக்கருளினால் உன் சன்னிதியில் தங்கத் தொட்டிலும் குழந்தையும் செய்து வைக்கிறேன்" என்று மனமாரப் பிரார்த்தித்தாள். அவள் வேண்டுதலை ஆமோதிப்பதுபோல் கோயில் மணி டாங் டாங் என்று ஒலித்தது. காமுவுக்கு மெய் சிலிர்த்தது. அவள் மனதில் என்றுமில்லாத ஒருவித மகிழ்ச்சி யேற்பட்டது.

நாட்கள் பறந்தன. காமுவின் பிரார்த்தனையும் பலித்தது. அம்பிகை அழகு வடிவான ஒரு பெண் குழந்தையை யளித்து விட்டாள். தம்பதிகளின் மனமகிழ்ச்சிக் கோரளவுமுண்டோ? அம்பிகையினருளால் உற்பத்தியான குழந்தைக்கு "மீனாக்ஷி" யென்ற திருநாமத்தையே சூட்டினார்கள். மீனாக்ஷி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தாள். அதாவது ஒவ்வொரு பேச்சிலும் செயலிலும் தெய்வீகத் தன்மையே பொருந்தி யிருந்தது.

குழந்தை பிறந்த பின்பும் நாள் தவரு மல் கோயிலுக்குச் சென்று வந்தாளானு லும் குழந்தையைக் கண்ட ஆனந்தத்தில் பிரார்த்தனையை மட்டும் செய்ய மறந்து விட்டாள்.

மீனுக்ஷிக்கு வயது மூன்ருகி விட்டது. அவள் அழுவதே கிடையாது. விஷமமும் பண்ணுகிறதில்லே. சேகரன் எதிர்பார்த்த படி குழந்தைக்கு பக்ஷணத்திலோ பொம் மையிலோ விளேயாட்டிலோ கொஞ்சங் கூட மனம் செல்லவில்லே. சதா சர்வ காலமும் மீனுக்ஷியின் படத்தை வைத் துக்கொண்டு "உனக்கு சாதம் ஊட்டட் டுமா? பிஸ்கோத்து வாங்கித் தரட்டுமா? மீனுச்சி! நீயேன் என்னேடே பேசவே மாட்டேங்கரே?" என்றெல்லாம் தனக்குத் தானே படத்துடன் பேசிக்கொண் டிருப் பாள். சாப்பிடும் போதும் தூங்கும்போ தும் கூட படத்தைக் கையை விட்டுக் கீழே இறக்க மாட்டாள். கோயிலுக்குப் போனல் திரும்பி வீட்டுக்கு வரவே மனம் வராது அவளுக்கு. கோயிலிலேயே இருப்பதென்ருலும் திருப்திதான் அவ ளுக்கு.

சாயங்காலம் கோயிலுக்குப் போகும் வேளே வந்தால் பெற்ருேருக்குமுன் தயா ராகக் கிளம்பி விடுவாள். மீனுக்ஷியின் தெய்வ பக்தியைக் காணக்காண பெற் ருேருக்கு ஆச்சரிய மதிகரித்தது. மற் றக் குழந்தைகளேப் போல் மீனுக்ஷியும் விஷமம் செய்யவில்லேயே என்று சேகர னுக்குக் கொஞ்சம் குறைதான்!

இப்படியே சில நாள் செல்ல சேகரனும் காமுவும் திடீரென்று கோயிலுக்குப் போவதை நிறுத்தி விட்டனர். வழக்கம் போல் கோயிலுக்குப் போகத் தயாராக இருந்த மீனுக்ஷி, பெற்ருேர் வெகு நேர மாகியும் புறப்படாததைக் கண்டு "அம்மா! ஏனம்மா இன்னும் கோயிலுக்குப்போ கலே? வாம்மா போகலாம். நேரமாச்சு. போகாட்டா மீனுச்சி கோச்சுப்ப" என் ருள்.

"மீனு! இனிமே நாமெல்லாம் கோவி லுக்குப் போகக்கூடாது. கோவி லுக்குள்ளே பறையன் போய்விட்டான். ஆத்திலேயே நமஸ்காரம் பண்ணு. அதுவே போதும்" என்று சமாதானம் கூறினள் காமு.

"நான் மாட்டேன். நீ வராட்டா நான் போவேன். பறையன் போனு என்ன நாம் போகப்படாதா? நீ அழச்சுண்டு போகாட்டா அப்பாவோடே போறேன்" என்று சொல்லிவிட்டு அப்பாவிடம் ஓடி அவன் காலேக் கட்டிக்கொண்டு "அப்பா! அம்மா என்னெ கோவிலுக்கு அழச்சுண்டு போகமாட்டாளாம். நீ அழச்சிண்டு போரையாப்பா?" என்று கெஞ்சினள் பேதை மீனு.

சேகரனும் காமு படித்த பாடத்தையே திரும்பப் படித்தான். இருவரும் மறுத்து விடவே என்றும் அழாத மீனு ஓவென்று அலறவாரம்பித்தாள். மீனுக்ஷி 'என்னெ கோவிலுக்கு ஒத்தரும் அழச்சுண்டுபோக மாட்டேங்கராளே' என்று கத்தினள். திடீரென்று வாசற்பக்கம் ஓடினள்.

சேகரனும் பின்னல் சென்ருன். மீனுக்ஷி அழுதுகொண்டே "நீ வாண்டாம் போ. நான் பங்கஜத்தோடு விளேயாடப் போகிறேன்" என்ருள்.

ஒரு நாளுமில்லாத திருநாளாக மீனுக்ஷி விளேயாடுகிறேன் என்று சொன்னதுமே சேகரனுக்கு உச்சி குளிர்ந்து விட்டது. "அதுதான் சமத்துக் குட்டியாளம்" என்று சொல்லிவிட்டுத் தட்டிக்கொடுத்துக் குழந் தையை அனுப்பினன்.

மீனுக்ஷி ஓட்டமாகப் பக்கத்து வீட்டுக் குச் சென்று பங்கஜத்தை விளேயாடக் கூப்பிட்டாள். பங்கஜம் எட்டு வயதுச் சிறுமி. ஏழை வீட்டுப் பெண். அடிக் கடி மீனுக்ஷியைத் தன் வீட்டுக்குத் தூக் கிப் போய் வைத்துக்கொள்வாள். மீனு க்ஷியிடம் அவளுக்கு உயிர்.

மீனுக்ஷியைக் கண்ட உடனேயே அவளே வாரி யெடுத்து முத்தமிட்டாள். மீனுக்ஷி பங்கஜத்தின் கன்னத்தைத் தட விக் கொண்டே "அக்கா! என்னெ கோவி லுக்கு அழச்சுண்டு போறையா?" என்று கேட்டாள். பங்கஜமும் குழந்தைதானே? பேசாமல் மீனுட்சியைத் தூக்கி டங் என்று இடுப்பில் வைத்துக்கொண்டு கோயிலேப் பார்க்கக் கிளம்பினள். மீனுக்ஷியின் இள மனது சந்தோ

ஷத்தால் துள்ளிக் குதித்தது. கோயிலில் ஹரிஜனங்கள் பட்டை பட்டையாக விபூதி யணிந்துகொண்டு வரிசையாக நின்று அம்மனைத் தரிசித்துக் கொண்டிருந்தனர். மீனாக்ஷிக்கு ஆத்துக்குப் போகவே மனது வரவில்லை. பங்கஜந் தான் பலவந்தமாகத் தூக்கி வந்து விட்டாள்.

இப்படியே தினம் மீனாக்ஷி அம்மா அப்பாவுக்குத் தெரியாமல் கோயிலுக்குப்போய் வந்துகொண் டிருந்தாள். எத்தனை நாட்கள்தான் இந்தத் திருட்டு வெளிப்படாமலிருக்கும்? ஒரு நாள் இதைக் கண்டு பிடித்துவிட்ட காமு பங்கஜத்தைக் கடிந்து கொண்டதுடன் வாசற் கதவையும் நிரந்தரமாக அடைத்து விட்டாள். பங்கஜமும் வருவதில்லை. மீனாவாலும் வெளியே போக முடியாமற் போய்விட்டது.

மீனா சரியாகச் சாப்பிடுவதுமில்லை. ஒருவருடனும் பேசுவதுமில்லை. படத்தை வைத்துக்கொண்டு சதா அழுதுகொண் டிருந்தாள். தீண்டாதார் என்ற வித்யாசம் அந்தக் குழந்தை உள்ளத்துக்கு என்ன தெரியும்?

ஒருநாள், சாப்பாடானதும் எல்லாக் காரியங்களையும் முடித்துக்கொண்டு படுக்கச்சென்றாள் காமு. இடி முழக்கத்துடன் மழை சோவென்று கொட்டிக்கொண்டிருந்தது. விடிந்தால் தீபாவளி. சேகரன் நாவல் படிப்பதில் முனைந்திருந்தான். மீனாக்ஷி படத்தை யணைத்துக் கொண்டே தூங்கினாள்.

மணி பன்னிரண்டடித்தது. சேகரனும் விளக்கை யணைத்து விட்டுப் படுத்தான். காமு நல்ல உறக்கத்தில் கனவொன்று கண்டாள்.

விடியற்காலம் வழக்கம்போல் எழுந்திருக்கும் போது பக்கத்தில் மீனாவைக் காணோம். வீடு முழுவதும் தேடியும் காணவில்லை. கோயிலுக்குப் போயிருப்பாளென்று எண்ணிக் கோயிலுக்குச் சென்றாள். அநேக ஹரிஜனங்கள் அம்பிகையைத் தரிசித்துக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு நடுவில் பூரணச்சந்திரனுதித்தது போல் மீனாக்ஷியும் கை கூப்பியவாறு நின்றுகொண்டிருந்தாள். காமு கோபத்துடன் குழந்தையைத் தூக்கிவரப்பார்க்கிறாள். ஆனால் திடீரென்று அம்பிகை, விக்ரஹத்தினின்றும் உக்ரமாக வெளிப்பட்டு மீனாவைத் தூக்கி மார்புடன் அணைத்த வாறு எடுத்துச் சென்று விடுகிறாள்.

காமு கோவெனக் கதறினாள் "அம்மா! இப்படி யென்னை ஏமாற்றலாமா? இது தருமமா? கண்ணே, மீனா, அன்னையுடன் ஐக்கியமாகி விட்டாயா? என்னைத் தவிக்க விட்டுப் போய்விட்டாயா?" என்று அழுதாள்.

சேகரன்விளக்கையேற்றி விட்டு "காமு! காமு! என்ன பிதற்றுகிறாய்?" என்று கேட்டான். காமு விழித்துக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தாள். தான் கண்டது கனவென்பதை அப்போதே அவளுணர்ந்தாள். அவள் உடல் வெடவெட வென்று நடுங்கியது. கண்ணைத் துடைத்துக் கொண்டு மீனாக்ஷியைப் பார்த்தாள். முகம் சிவந்திருந்தது. உடம்பைத் தொட்டுப் பார்த்தாள். நெருப்புமாதிரி சுட்டது. "ஐயோ! குழந்தைக்கு ஜுரமடிக்கிறதே! என்னசெய்வேன்? அம்பிகே! நீதான் துணை" என்று கண்ணீர் விட்டாள். சேகரனுக்கும் கவலையுண்டாயிற்று.

"மீனா, மீனா!" வென்று பலமுறை கூப்பிட்டும் குழந்தை ஒன்றும் பேசவில்லை. "மீனாக்ஷி அதோ வாராளே! வா, வா, வரயா?" என்று ஏதோ புலம்பிக்கொண் டிருந்தாள் மீனா.

காமு பெருங் குழப்பமடைந்து "ஐயோ குழந்தைக்கு என்னமோ வந்துவிட்டதே. சண்டாளி, நான் கோயிலுக்குப் போகக் கூடாதென்று சொன்னேனே" என்று புலம்பினாள்.

திடீரென்று மீனா எழுந்து உட்கார்ந் தாள். கண்களை உருட்டி விழித்தாள். "அதோ மீனாக்ஷி என்னைக் கூப்பிடறாளே!" என்று சொல்லிவிட்டுக் கலகல வென்று சிரித்தாள். கண்கள் சுழன்றன. தொப்பென்று படுக்கையில் விழுந்தாள். பராசக்தி தன் குழந்தையைத் தன்னிடமழைத்துக்கொண்டுவிட்டாள். சேகரனும் காமுவும் 'ஓ' வென்றலறினர். அவர்களது அழுகுரல்கள் வானைப் பிளக்கும் இடி முழக்கத்துடன் கலந்து ஒலித்தன.

# திருப்பதி யாத்திரை

[ஆர். கிருஷ்ணன், நீலகிரி]

முத்துக்களைப்போல் சொற்களைச் சேர்த்து கவி கட்டவும், புஷ்பமாலை தொடுப்பதுபோல், கதை எழுதவும் எனக்குத் தெரியாது. ஆனால் என் ஆவல் மட்டும் என்னைவிடவில்லை. வெகுகாலமாக காகிதம் பென்ஸிலை எடுத்து வைத்துக்கொள்வேன். ஒன்றுமே தோன்றாது. மேலும் கீழும் பார்த்துக்கொண்டும், சப்தம் ஏதாவது கேட்டால் எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டும், போதைப் போக்கிவிடுவேன். சமயத்தில் சகாக்களும் வந்து விடுவர். 'ஒரு 504 போடலாம்' என்பார்கள். அப்புறம், கதை எழுதினாற்போல்தான்! எதற்கும் காலம் வரவேண்டாமா?

சனிக்கிழமை இரவு சென்னையை விட்டுப் புறப்பட்டேன். பம்பாய் மெயிலில் திருப்பதிக்குப் பிரயாணமானேன். ஒரே கூட்டம். எப்படியோ சமாளித்துக்கொண்டு ஒரு ஸீட் பிடித்துக்கொண்டேன். என்னைச் சுற்றிச் சகோதரப் பிரயாணிகள் பல ஜாதியினர். ஒரு முகம்மதியர் உறவு கொண்டாட வந்து விட்டார். "என்னுங்க்றேன். நம்பள்ளே ஒத்துமையில்லே. ரங்கநாத சாமி எங்க மச்சானில்லே. பேதம் கூடாதுண்டுதானே நம்ப ஒரையூர் நாச்சியாரைக் கண்ணாலம் செஞ்சுக்கிட்டாரு. புறத்தியானுக்கு எடம் தரப்படாதுங்க" என்று வெளுத்துக் கட்டினார்.

இதற்குள் ரேணுகுண்டா நெருங்கிவிட்டது. இந்த 'ரயில் உறவும்' முடிந்து நான் திருப்பதி ரயிலுக்கு மாறினேன். "ஏமண்டி, மீரு திருப்பதிக்குப் போத்தாரா" என்று ஒரு ஆந்திரவாடு என்னை நெருங்கினார். எனக்குத் தெலுங்கு சரியாய்ப் புரியாமல், இங்கிலீஷில் பேசும்படி சொன்னேன். அவர் வழிகாட்டி (Guide) யாம். யாத்திரீகர்களுக்கு உதவி செய்து, 'இஞ்சித்' கிடைத்ததைப் பெற்றுக்கொள்வதே வேலை. என்னுடன் இன்னும் நாலு பேர் சேர்ந்து கொண்டார்கள். அதில் ஒருவர் கடப்பா, மற்றொருவர் பித்தாபுரம். ஒருவருக்குத் தெலுங்குதான்வரும். மற்ற சிலருக்கு இங்கிலீஷ் கொஞ்சம் தெரியும். ஏதோ புரிந்தும் புரியாமலும் சள, சள வென்று பேசித் தீர்த்தோம்!

திருப்பதியை யடைந்தோம். கடப்பாவைத் தவிர மற்றவர் எல்லாம் காபி சாப்பிட்டோம். அடிவாரம் வருவதற்குள், சிலாசாஸனம் செய்து வைப்பதாகப் பலர் எங்களைச் சுற்றிக் கொண்டார்கள். "உங்கள் பேரை கல்லில் வெட்டுகிறேன்—எந்த பாஷையிலும் சரி" என்றான் ஒருவன். எங்களுக்கும் சபலம் தட்டியது. ஒரு எழுத்துக்குக் காலணாவீதம் பெற்றுக் காரியத்தை முடித்தான் ஆசாமி.

இதற்குள் 'சில்லறை' வியாபாரி ஒருவன், "வழியில் பிச்சைக் காரர்களுக்குத் தர்மம் செய்யலாம். உண்டியலுக்கு தம்பிடிகளும், பைசாக்களும் வேண்டியிருக்கும். கைநிறையக் காசு போடலாம்" என்று சரமாரியாய்ப் பொழிந்தான். நாலு அணுவுக்குத்தம்பிடியும், நாலு அணுவுக்கு சக்கரம் போட்ட காசும் வாங்கிக்கொண்டேன்.

அடிவாரத்தில் இவ்வளவு வைபவமும் முடிந்தது. பின்பு காளி கோபுரம் ஏறினோம். முழங்காலைப் பிடித்துக்கொண்டு மெதுவாக ஏறிமுடித்தேன். பலர் டோலிகளில் வந்தார்கள். ஏறும்போதும் இறங்கும் போதும், வழிநடந்த களைப்புத் தீர 'ஹரி நாராயணா, கோவிந்தா!" என்ற பக்தர்களின் கோஷங்கள் ஒரு தனியின்பத்தை யளித்தன.

போகும் வழியில் குடிநீர் வசதி தாராளமாய்க் கிடைத்தது. களை தீரக் குடித்து வழி நடக்கலானோம். இடையில் ஒரு ஹோட்டலில் நுழைந்து, காபியும் குடித்தோம். பின்னர் வழி நெடுக ஸ்ரீ. பித்தாபுரம் பகவான் பிரதாபங்களை 'மாட்லாடிக்' கொண்டே வந்தார். பாதையின்

இரு புறமும் மரங்களும் மலைகளும் கண்களுக்கு வெகு அழகாய்க் காணபபட்டன.

கடைசியில் திருப்பதி சேர்ந்து, சத்திரத்தில் மூட்டை முடிச்சுகளை வைத்தோம். பக்கத்திலிருந்த குளத்தில் நீராடிக் கொண்டோம். நடந்த களைப்பில், குளத்தில் நீர் வெகு ரமணீயமாகத்தானிருந்தது. கரையேறவே மனமில்லாமல் இருந்தது. இதுதான் நாராயண தீர்த்தம். சுற்றுப்புறத்தில் கபில தீர்த்தம், பாப விநாசம், கோமுக தீர்த்தம் என்ற பல ரம்மியமான இயற்கை இன்பத்தைத் தரும் நீர் நிலைகள். மலையழகும், மர நிழலும், அருவி நீரும் எவரையும் கவரச் செய்வனவாயுள்ளன.

திருவேங்கட மலையானின் சந்நிதி சேர்ந்தோம். காலை 7-30முதல் 8 வரையும் நடுப்பகல் 12 முதல் 1 மணிவரை தரும தரிசனம். பிறவேளைகளில் இஷ்ட தேவதைகளுக்குக் காணிக்கை செலுத்தினால் பிரத்தியேக தரிசனம் கிடைக்கும். கர்ப்பூர ஹாரத்திக்கு ரூ. 1—2—0 கொடுத்து தர்ம தரிசனம் கிடைக்கப் பெற்றோம். உண்டியலில் கை நிறையக் காசுகளை சேர்ப்பித்தோம். அங்கேயே பொங்கல் முதலியவை வாங்கி வயிற்றுப்பாட்டை முடித்துக்கொண்டு திரும்பினோம்.

அங்கேயே இருப்பவர்கள் வெகு சாதாரணமாக மலையேறி இறங்கி விடுகிறார்கள். மலைப்படிகளில் நேராக ஏறவோ, இறங்கவோ கூடாது. சாய்ந்த முகமாய், குறுக்கும் நெடுக்குமாக, ஏறி இரங்க வேண்டுமாம். இதை ஒரு கிழவி எங்களுக்குத் தெரிவித்தாள். அவள்முகத்தில் களைப்பே தோன்றவில்லை. தினமும் காலையில் மலையேறி பகவானுக்குப் பால் கொண்டு கொடுத்து தரிசனம் செய்து வருகிறாள். கிழவியின் மனோதிடமும், பக்தி உணர்ச்சியும் எங்களுக்கு ஆச்சரியமாயிருந்தது.

பிறகு திருச்சானூரும் (அலர்மேலு மங்கா புரம்) போய் தரிசனம் செய்து கொண்டோம். அடுத்தபடி கோவிந்தராஜனையும் நமஸ்கரித்துக்கொண்டு, சத்திரத்தை யடைந்தோம். இதற்குள் மணி 8-க்கு மேல் ஆகிவிட்டது. கீழ்த் திருப்பதியில் வயிற்றுச் சாமியையும் பூசித்துவிட்டு மதராசுக்கு ரயிலேறினேன்.

---

## அறிக்கை

பாரதமணிக்கு விஷய தானம் செய்பவர்கள் கவனிக்கவேண்டிய சில முக்கிய விஷயங்கள் :—

(1) கதைகளோ கட்டுரைகளோ பாரதமணி பக்கங்களில் மூன்றுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

(2) காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(3) கதைகள், கட்டுரைகள் எழுதுவோரின் முழுவிலாஸமும், அவர்கள் வயதும் தொழிலும் குறிக்கப்பட் டிருக்கவேண்டும்.

(4) வேண்டிய தபால் பில்லை அனுப்பினாலொழிய, பிரசுரத்துக்கு அங்கீகரிக்கப் படாத கதைகள் கட்டுரைகள், திருப்பி அனுப்பப்படமாட்டா.

ஆசிரியர்

# நான் சொன்ன கதை

"சிற்பி"

நேற்று காலை இந்துவும் அவள் கணவனும் டில்லியிலிருந்து வந்தார்கள். இந்துவின் மூன்று வயதுப் பெண் சரோஜாவும் அவர்களுடன் வந்திருந்தாள்.

சாயங்காலம் மணி சுமார் ஆறு இருக்கும். இந்துவும் அவள் கணவனும் உலாவச் சென்று விட்டார்கள். சரோஜாமட்டும் என்னுடனேயே வீட்டில் இருந்தாள். சிறிது நேரம் நான் நூல் நூற்றுக்கொண்டிருப்பதை உன்னிப்பாகப் பார்த்துவிட்டுத் திடீரென்று "மாமா, எனக்கு ஒரு கதை சொல்லு. அப்பாவுக்கு கதையே தெரியாதாம்" என்றாள் அச்சிறுமி. எனக்கு சிறிது நாட்களாக என் ஜீவிய சரிதத்தின் சில சம்பவங்களை யாரிடமாவது சொன்னால்தான் என் மனத்திலுள்ள பெரிய பாரம் நீங்கும்போல் தோன்றிற்று. சரோஜா ஒரு குழந்தை; என் கதையை அவளால் புரிந்துகொள்ள முடியாது. இருந்தாலும் எனக்குக் கேட்பதற்கென ஒரு ஜீவன் இருந்தால் போதும்போல் இருந்தது. நூல் நூற்றுக்கொண்டே கதை சொல்ல ஆரம்பித்தேன்.

"ஓர் ரமணீயமான இரவு. சந்திரன் மேகங்களிடையே பிரகாசித்துக்கொண்டிருந்தான். நான் ஜாகையிருந்த ஹோட்டலிலிருந்துபுறப்பட்டுக்காவிரியைநோக்கி நடந்தேன். காற்று ஜில்லென்று வீசிக்கொண்டிருந்தது. இப்படிப்பட்ட நேரங்கள் கவிகளுக்கு காவியம் எழுதவோ ஞானிக்கு ஈசனைப்பற்றி சிந்திக்கவோ உற்சாக மளிக்கக்கூடியதாக இருக்கும். சாரமற்ற என் வாழ்க்கைக்கு இது என்ன சந்தோஷத்தை ஊட்டும் என்று பலவாறாகச் சிந்தித்துக்கொண்டே சென்றேன். காவிரிக் கரையும் வந்தது. நான் ஆற்று மணலில் உட்கார்ந்தேன். பொழுது போவதற்காக, மணலில் கோடுகள் வரைவதும் அழிப்பதுமாக இருந்தேன்.

"நான் உட்கார்ந்த இடத்திலிருந்து சிறிது தூரத்தில் ஒரு ரயில்பாலம் இருந்தது. அதன்மேல் ஓர் பாஸஞ்சர்சென்று கொண்டிருந்தது. அதில் எவ்வளவு வண்டிகள் கோர்க்கப் பட்டிருக்கின்றன என்று எண்ணிக்கொள்வேன். ஒருஜன்னல்வெளியேயும் ஒருபிரயாணிகூட எட்டிப்பார்க்கவில்லை. கடைசி வண்டியில் மட்டும் ஓர் உருவம் கதவைத்திறந்து நின்று கொண்டிருந்தது. சந்திரன் மங்கலாய் பிரகாசித்துக் கொண்டிருந்ததால் அது புருஷனா பெண்ணா என்று தெரியவில்லை. கடைசி வண்டி ஆற்றின் நடுவே வந்தது. அவ்வுருவம் இரு கரங்களையும் விரித்துக் கொண்டு நடு ஆற்றில் விழுந்தது. ரயில் மட்டும் ஓர் பிரயாணி குறைந்ததன் உணர்வில்லாமலேயே சென்றுகொண்டிருந்தது! நானும் தண்ணீரில் குதித்தேன்.

"அச்சச்சோ! சொக்காயெல்லாம் நினைந்துபோயிருக்குமே" என்றாள் சரோஜா வியப்புடன்.

நான் சிரித்துக்கொண்டே மேலும் சொல்ல ஆரம்பித்தேன்.

"சுமார் பத்து நிமிஷங்களாயிருக்கும். நான் அவ்வுருவத்தை கரைக்குக் கொண்டு வருவதற்கு. கரைசேர்ந்த பிறகு அது ஒரு பெண்மணி யென்று தெரியவந்தது. அவளை மணலில் படுக்கவைத்து மூச்சு வருவதற்கு சிகிச்சை செய்தேன். சந்திரன் மேகங்களின் ஆலிங்கனத்திலிருந்து விடுவித்துக்கொண்டு பிரகாசித்தான். அப்பெண்ணின் முகம் வெகு ரம்மியமாயிருந்தது. சிறிது நேரத்தில் அவள் மெதுவாகக் கண்ணைத் திறந்தாள். அவள் முகத்தில் குடிகொண்டிருந்த சாந்தமும் நிம்மதியும் எங்கேயோ பறந்துசென்றன. "என்னை ஏன் காப்பாற்றினீர்?" என்று அருவருப்புடன்

அவள் கேட்டுவிட்டு உரக்கச் சிரித்தாள். அவ்விரவில்அவள் சிரிப்பு என் உடம்பைச் சிலிர்க்கச் செய்தது. "என் எண்ணம் எதுவும் கைகூடியதில்லை. என் கடைசி எண்ணம் மட்டும் எப்படிக் கைகூடும்?" என்று சிரிப்பின் நடுவில் அலறினாள். அவளை ஒருவிதமாகத்தேற்றி நான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றேன். பக்கத்து அறையில் அவளுக்கு வசதி செய்து கொடுத்தேன்.

"நானும் என் அறையில் சென்று படுத்துக்கொண்டேன். ஆனால் தூக்கம் மட்டும் வரவில்லை! 'இவள் யார்? எங்கிருந்து வந்திருக்கிறாள்? ஏன் ஆற்றில் விழுந்தாள்' என்ற பற்பல கேள்விகளை என் உள்ளம் எழுப்பிற்று. இரவு பன்னிரண்டு அடித்தது. எனக்குத் திடீரென ஒரு பயம் உண்டாயிற்று. ஒருதரம் ஆற்றில் விழத் துணிந்தவள் ஏன் இரண்டாந் தரம் விழத் துணியமாட்டாள்? பரபரப்புடன் அவள் அறைக்குச் சென்று கதவைத் தட்டினேன். கதவு திறந்தவாறே இருந்தது. உள்ளே சென்று பார்த்தேன். படுக்கையும் காலியாயிருந்தது. என் சம்சயம் ஊர்ஜிதமாய்விட்டது. உடனே காவிரியை நோக்கி ஓடினேன். பாதிவழியில் அவள் மெதுவாக நடந்து கொண்டுபோவது தெரிந்தது. அவள் நான் ஓடிவரும் சப்தத்தைக் கேட்டு நின்றாள். அவளை அணுகி பரபரப்புடன் 'இனி இம்மாதிரி செய்வதில்லை என்று சத்தியம் செய்' என்றேன். அவள் சற்று நேரம் மௌனமாயிருந்துவிட்டு 'ஏன் செய்ய வேண்டும்?' என்றாள். 'நான் உன்னைக் காப்பாற்றினேன். அதற்கு இந்தக் கைம்மாறு செய்' என்றேன். என்குரல் கொஞ்சுவதுபோலிருந்தது. 'நீர் காப்பாற்றினது வாஸ்தவம். ஆனால், அது உதவி என்று எனக்குத் தோன்றவில்லை' என்றாள்.


"என் கண்களிலிருந்து ஏனோ பல பலவென்று கண்ணீர் வந்தது. அதுவே அவளை நிச்சயிக்கச் செய்தது. 'சரி செய்கிறேன்' என்று பெரு மூச்சு விட்டுக்கொண்டே சொன்னாள். ஹோட்டலுக்குத் திரும்பினோம். வழியில் அவள் பெயரை வினவினேன். 'இந்து' என்றாள்" என்று சொல்லிவிட்டு சரோஜாவின் முகத்தைப் பார்த்தேன். அசல் அன்று நிலா ஒளியில் பார்த்த இந்துவின் முகமும் சரோஜாவின் முகமும் ஒரே மாதிரி இருந்தன!

மேலும் தொடங்கினேன்.

"மறுநாட் காலை நாங்களிருவரும் என் அறையில் காப்பி சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். அவள் எங்கேயோ பார்த்து யோசனை செய்துகொண்டிருந்தாள். 'நீ எங்கிருந்து வந்துகொண்டிருக்கிறாய்' என்று அவளைக் கேட்டேன். அவள் மௌனம் சாதித்தாள். அவள் நினைவு இங்கிருப்பதுபோல் தோன்றவில்லை.

"சாயங்காலம் உலாவச் சென்றோம். அவளைப்பற்றி நானே ஒன்றும் கேட்கக்கூடாது என்று பேசாமல் நடந்தேன். அவளே என்னைப்பற்றி 'அறிய ஆவலாயிருக்கிறதா?' என்று கேட்டாள். "மிகவும்" என்று பதிலளித்தேன். அவள் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள். 'என் கதை பெரிதுமல்ல, சுவாரஸ்யமானதுமல்ல. சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்துவிட்டேன் பாபி. கம்ஸனைப் போன்ற ஒரு மாமா என்னை எடுத்து வளர்த்தான். பன்னிரண்டு வயதில் ஒரு கிராதகியின் மாட்டுப் பெண்ணாக வாய்த்தேன். நான்கு வருடங்களாக என் மாமியாரின் கொடுமை பொறுக்க முடியவில்லை. என் கணவன் நேற்று 'இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுத்துக்கொள். எனக்கு வேலையானவுடன் நாமிருவரும் வெளியூருக்குப் போய்விடலாம்' என்றார். இது நூறாவது தடவை இம்மாதிரி சொல்வது. 'வேலை யில்லாதவர்கள் கலியாணம் செய்துகொள்ளக்கூடாது' என்று சொன்னேன். வந்து விட்டது கோபம் அவருக்கு. பூட்ஸ் காலாலேயே ஒரு உதை விட்டு 'என் வீட்டிற்கு இனி வராதே' என்று அடித்துத் துரத்திவிட்டார். மாமாவின் வீட்டிற்காவது வரலாம் என்று ரயிலில் ஏறினேன். ஆனால் ஒரு நரகத்திலிருந்து மற்றொரு நரகத்திற்குப் போக என்மனம் சம்மதிக்கவில்லை. அதனால்

"மட்டமான சோப்புகள் எனக்கு உதவாது—
நான் உபயோகிப்பது
ஸன்லைட் சோப்."




"முன்பெல்லாம் நான் மட்டமான சோப்புகள் உபயோகித்து வந்தேன். ஒரு நாள் என் சிநேகிதி ஒருவளை அவள் தன் துணிகளை அவ்வளவு பிரகாசமான வெண்மையாக எப்படி வெளுக்கிறாள் என்று விசாரித்தேன். தான் ஸன்லைட் சோப் உபயோகிப்பதாகவும், அது அளிக்கும் அதிகப்படி நுரைதான் தன் துணிகளை அவ்வளவு அற்புதமான வெண்மையுடன் பிரகாசிக்கச் செய்வதாகவும் அவள் கூறினாள். அன்று முதல் நான் மட்ட ரகமான சோப்புகளைத் தொடுவதுகூட இல்லை. ஸன்லைட் சோப் ஒன்றையேதான் உபயோகித்து வருகிறேன். கொஞ்சமும் அழுக்கின்றி பளிச்சென்று பிரகாசிக்கும் என் துணிகளின் அழகை இப்பொழுது எல்லோரும் புகழ்ந்து பேசுகிறார்கள்."

# ஸன்லைட் சோப்

சுத்தமான தாவர எண்ணெய்களால் இந்தியாவிலேயே செய்யப்பட்டது.

S. 18-50 TM

LEVER BROTHERS (INDIA) LTD.

தான், காவிரி அம்மனை சரணடைந்தேன்.'' என்று முடித்தாள்.

"அவள் சரிதம் மிகவும் துக்ககரமா யிருந்தது. ஒரு விதத்தில் நானும் அவ ளும் ஒன்றுகவே இருந்தோம், அவ ளும் அநாதை; நானும் அநாதை. ஆனல் அவள் ஏழை. என்னை பணக்காரன் என்று சொல்லிக் கொள்ளுகிருர்கள். இவள் மனதை வேறு விஷயத்தில் திருப்ப வேண் டும் என்று தீர்மானித்தேன். இப்படியே இருந்தால் அவள் துக்கமே அவள் முடி வாகும்.

"அவளை எவ்வளவு தூரம் படித்திருக் கிருள் என்று கேட்டேன். 'இரண்டாவது பாரம் வரை' என்ருள். இது எனக்குத் திருப்தி யளித்தது. ஏனெனில் வெகு நாட்களாகக் கிராம ஜனங்களுக்கு கல்விகற் பிக்க வேண்டுமென்ற அவா எனக்கு இருந் தது. இவள் என்னுடன் இருந்தால் கிராம சேவை செய்ய உதவியாயிருக்கும் என்று தோன்றிற்று. அவளிடம் இதைப்பற்றிப் பிரஸ்தாபித்தேன். அவளும் உற்சாகத் துடன் சம்மதித்தாள்.''

நூற்பதை நிறுத்திவிட்டு சரோஜாவைப் பார்த்தேன். அவள் ஊக்கத்துடன் என் முகத்தைப் பார்த்துக்கொண் டிருந்தாள். மறுபடியும் சொல்ல ஆரம்பித்தேன்.

"அன்று இரவே என் ஊராகிய பெண் ணுத்தூருக்குப் பிரயாணமானேம். என் வீட்டிலேயே ஒரு பகற் பள்ளிக்கூடமும் ஒரு இராப் பள்ளிக்கூடமும் ஸ்தாபித்தோம். இராப் பள்ளிக்கூடத்தில் குடியானவர்களும், பகற் பள்ளியில் அவர் கள் குழந்தைகளும் கல்வி பயின்று வந் தார்கள். எங்கள் உற்சாகத்திற்குமேல் இருந்தது அவர்கள் உற்சாகம். இரண்டு வருடங்களில் குடியானவர்கள் சுலபமாக எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டார்கள். சிறுவர்களும் சிறுமிகளும் கணக்கில்கூட அப்பியாசங்கள் செய்ய ஆரம்பித்தார்கள்.

"மற்றொரு வருடமும் கழிந்தது. பாரதியார் தினமும் வந்தது. இந்து, அதைச் சிறப்பாகச் கொண்டாடுவதற்கு மிக்கப் பாடுபட்டாள். கிராம வாசிகளுக்கு பாரதியாரின் சரிதத்தை உருக்கமாக எடுத்துச் சொன்னுள். அன்று பாரதியார் பாடல்களைப் புதிய தேசீய உணர்ச்சி எழும்படி கிராம மக்களுக்குப் பாடிக் காட்டி ஞள். நாங்கள் அன்று அநுபவித்த மனச் சாந்தியைப்போல் அதற்கு முன்பு எப் பொழுதும் அனுபவித்திருக்கமாட்டோம். கிராமம் சுபிக்ஷமாயிருந்தது. குடியானவர் கள் மூடத்தன்மையைவிட்டுவிட்டுப் புத்தி விசாலமடையும் மார்க்கத்தைக் கடைப்பற் றிக் கொண்டிருந்தார்கள். இதைவிடவேறு எங்களுக்குத் திருப்தியும் சாந்தியும்அளிக் கும் வேலை வேறென்ன விருக்கிறது ?'' என்று கூறிவிட்டுச் சரோஜாவைப் பார்த்தேன். அவள் முகத்தில் அவ்வளவு ஊக்கம் தென்படவில்லை. நாட்டின் விஷ யங்கள் குழந்தைகளுக்கு என்னதெரியும்? மறுபடியும் தொடங்கினேன்.

"பாரதியாரின் கொண்டாட்டத்திற்கு ஒரு வாரத்திற்குப் பிறகு தபால்காரன் இந்துவிற்கு ஒருரெஜிஸ்டர்ட்கவர்கொண்டு வந்திருந்தான். கடிதத்தைப் படித்த உடன் அவள் முகம் மலர்ந்தது. மறுபடியும் ஒருதரம், அதைப் படித்துவிட்டு அதை என்னிடம் நீட்டினுள். நானும் அதைப் படித்தேன். அதில் எழுதியிருந்ததாவது: 'இந்து, எனக்கு போனவருடம் டில்லியில் வேலையாயிற்று. நீ போனதிலிருந்து என க்கு வாழ்க்கையில் உற்சாகமே ஏற்பட வில்லை. நீ இருக்கிற இடம் இவ்வளவு நாட் களாக எனக்குத் தெரியவில்லை. நேற்று தான் உன் பெயரையும் கிருஷ்ணன் பெய ரையும் பாரதியார் கொண்டாட்டத்தின் சம்பந்தமாகப் பத்திரிகையில் பார்த்தேன். நான் அன்று மிருகத்தன்மையாக நடந்து கொண்டதற்கு என்னை நீ மன்னிக்க வேண்டும். நீ என்னிடம் திரும்பி வரா விட்டால், என் வாழ்க்கையே பாழாகி விடும். அப்பாவும் அம்மாவும் தஞ்சாவூரி லேயே இருக்கிருர்கள்.........''

"மேலே படிக்க எனக்கு ஓடவில்லை. ஏனே எனக்கு இக்கடிதம் சந்தோஷம் அளிக்கவில்லை.

"அன்று இரவு முழுவதும் படுக்கை யில் புரண்டுகொண்டே யிருந்தேன். அவள் ஆற்றில் விழுந்ததும்,நான் அவளைக் கரையேற்றியது முதலியன வெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருக என் மனக்கண்முன்

தோன்றி மறைந்தன. நினைக்க எல்லாம் கதைபோல் இருந்தன. இந்து இவ்வளவு நாட்கள் என்னிடம் இருந்துவிட்டு இப்போதுபோவதுஎனக்குநியாயமானதாகத் தோன்றவில்லை. 'நாங்களிருவரும் கிராமத்தில் நிம்மதியாய் இருப்பதை தடுக்க இவன் யார்?' என்று அவள் கணவனை நொந்து கொண்டேன். 'அன்று கணவனிடமிருந்து வந்தாள், இன்று திரும்பிப் போகிறாள். இது நியாயம்தானே!' என்று என் புத்தி சொல்லிற்று. என் அந்தரங்க வாழ்க்கையில் வெளிச்சம் கொண்டுவந்தவள் இவள்தான். அதை மறுபடியும் அந்தகாரத்தில் மூழ்கடிப்பது இவளுக்குத் தகாது என்று வாக்குவாதம் செய்தது என்மனம். ஆனால்......... அவள் கணவனிடம் போக மறுத்தால்.........!

"காலை காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். இந்துவின் முகத்திலிருந்து அவளும் தூங்க வில்லை என்று கண்டுகொண்டேன். 'அண்ணா!' என்றாள் தழதழத்த குரலில். மின்னல் மின்னிற்று. நான் வாயைத்திறக்கவில்லை. 'போக விடை கொடு' என்றாள். இடியும் இடித்து விட்டது.

'நீ என்னை விட்டுப்போவது நியாயமில்லை. உன் கணவன் வாழ்க்கையை பாழ்படுத்தாமலிருப்பதற்காக நீ என் வாழ்க்கையைப் பாழாக்கப் போகிறாயா?' என்றேன்.

'இந்தியப் பெண்ணிற்கு கணவன் தான் தெய்வம். ஒரு சிறிய பாவத்திலிருந்து தப்பி பெரியபாவம் செய்யக் கூடாது' என்றாள். அவளுக்கு அவ்வளவு புத்தியைக் கொடுத்ததற்காக கடவுளைக் கடிந்து கொண்டேன்.

'நீயோசித்துசொல்' என்றேன்.

'நேற்று இரவு முழுவதும் யோசித்துத் தான் சொல்லுகிறேன்' என்றாள். 'கிராம சேவை என்னவாகும்?' என்று என் கடைசி பாணத்தை விட்டேன்.


அதைத்தைரியமாகத்தடுத்துக்கொண்டு 'நீங்கள் இருக்கும்போது கிராமவாசிகளுக்கு என்னகுறைவு? நான் போன பிறகு வேலை உங்களுக்கு அதிகமாயிருக்கும். ஆனால் உங்கள் ஊக்கத்திற்கு முன்பு சிரமம் எட்டிப்பார்க்க முடியுமா என்ன?' என்றாள்.

மழையும் பெய்து விட்டது. பிரவாகத்தில் என் மனக்கோட்டைகளெல்லாம் மூழ்கின.

அன்றிரவு டில்லிக்குப் புறப்பட்டாள். போகும் பொழுது என்னை நமஸ்கரித்து எழுந்து நின்றாள். இருவருடைய கண்ணீரும் ஒரே சமயத்தில் தரையில் விழுந்தது.

அன்று அவள் ஏற்றிய கிராமசேவை என்னும் தீபம் இன்னும் பிரகாசத்துடன் எரிந்து கொண்டிருக்கிறது" என்று சொல்லி முடித்தேன்.

நூற்பதையும் நிறுத்திவிட்டு சரோஜாவைப் பார்த்தேன். அவள் சுகமாக நாற்காலியில் தூங்கிக்கொண்டிருந்தாள்!



# எனது கிராம அனுபவம்

"காந்தன்"

வண்டி 'லொடக், லொடக்,' என்று சென்றுகொண்டிருந்தது.

"என்ன தாத்தா! இன்னம் எத்தனை மைல் இருக்கு?" என்று கேட்டேன் தலையைச் சொரிந்துகொண்டே.

"இன்னும் சித்த நாழியிலே போயிடலாம். என்னடா சப்பாணி தூங்கறே! உம்! வண்டியைத் தட்டிவிடு. சீக்கிரம்! மாட்டைக் குத்தி விரட்டேண்டா" என்று சொல்லிக்கொண்டு ஒரு சிமிட்டாப் பொடி உறிஞ்சினார் தாத்தா.

* * *

தாத்தா, என்னுடைய தங்கை கல்யாணத்திற்கு வந்திருந்தார். அவர் மாத்திரந்தான் வந்திருந்தார். "பாட்டியின் உடம்புக்குச் சௌகரியமில்லை. அதனால்தான் அவளைக் கூட்டிண்டு வரலை" என்று ஏதோ ஒரு சாக்குச் சொன்னார். அந்தச் சமயம் எனக்குக் கோடை விடுமுறை. தாத்தாவும், அவர் கிராமத்திற்கு அழைத்தார். நானும் 'சரி' என்று ஒப்புக்கொண்டேன்.

நல்ல பன்னிரண்டுமணி வெய்யில். எனக்குக் 'கப, கப' வென்று பசிக்க ஆரம்பித்தது. வண்டியிலேயே சேர்ந்தாப்போலிருந்த அலுப்புவேறு. பாதையும் நொடிசல். மண்டையும் முட்டி, முட்டி, காய்ச்சுப் போய்விட்டது. 'ஏண்டாப்பா போனேம்' என்றுகூட ஆய்விட்டது.

'உஸ், புஸ்' என்று ஆத்திரத்தைக் காண்பித்தேன். தாத்தா என் முகக் குறிப்பை அறிந்தவர்போல் "என்னடா! பசிக்கிறதா?" என்று கேட்டார்.

"ஆமாம்!" என்று தலையசைத்தேன். "டே! சப்பாணி! சடையப்பன் கோவில் பக்கத்திலே ஊருணியிருக்குல்லடா! அங்கே வண்டியை நிறுத்து" என்று வண்டிக்காரனிடம் சொன்னார்.

வண்டியும் 'கட, கட' என்று ஓடியது.

* * *

ஊருணியில் தண்ணீர் பால்போல் இருந்தது. அந்த மாமரத்து நிழலுக்கும் அந்தக் காற்றுக்கும், அந்தக் கட்டுச்சாதம் தேவாமிர்தமாயிருந்தது. நானும் தாத்தாவும் வயிறாரஉண்டோம். வண்டிக்காரனும் வயிறாரச் சாப்பிட்டான்.

"என்னடா! சப்பாணி! சாப்பிட்டாச்சல்ல? மாடுகளுக்குத் தண்ணி காமிச்சியா! சீக்கிரம்! வண்டியைக் கட்டு" என்று தாத்தா சொன்னார்.

மாடுகளின் கழுத்தில் கட்டியிருந்த மணிகள் 'ஜல, ஜல' என்று ஒலிக்க வண்டியும் புதுக்குடிப் பிள்ளையார் கோயிலைச் சுற்றிச் சென்றது. வயல்களில் கதிரறுப்பதும், களையெடுப்பதுமாயிருந்தனர் குடியானவர்கள். ஒரு பக்கத்தில் ஆட்டு மந்தை மேய்ந்துகொண்டிருந்தது. அந்தப் பிள்ளையார் கோயிலில் இடையர்கள் 'பதினெட்டாம் புள்ளி' விளையாடிக்கொண்டிருந்தனர். தாத்தா என்னிடம் "அது நம்ம நிலம்" என்று சொல்லிக்கொண்டே வந்தார்.

வண்டியும் தாத்தாவீட்டிற்கு முன் நின்றது. தாத்தா வண்டியைவிட்டு இறங்கினதும், வாயிலில் கட்டியிருந்த மாடு "அம்மா" என்று கத்திற்று. நான் வண்டியிலிருந்து கீழே இறங்கினேன். சுற்றும் முற்றும் பார்த்தேன். பத்துப் பதினைந்து வீடுதான் ஓட்டுவீடுகள். மற்றவையெல்லாம் கூரைதான்.

பாட்டி வாசலில் நின்றுகொண்டிருந்தாள். "பாட்டி! சேவிக்கிறேன்" என்றேன் கையைக் கூப்பிக்கொண்டு.

"மகாராசனா யிரு! இத்தனை நாள் வரேன், வரேன், என்று சொல்லி ஏமாத்தூட்டே! இப்பவாவது வந்தியேப்பா!" என்றாள்.

* * *

விடியற்காலம் திண்ணையிலுட்கார்ந்துகொண்டு பல் தேய்த்துக் கொண்டிருந்தேன்.

"சாமி!" என்று ஓர் ஆள் வாசலி லிருந்து கூப்பிட்டான்.

"யாரடா! கறுப்பத்தேவனு!" என்று கேட்டுக் கொண்டே தாத்தா வெளியே வந்தார்.

"இவரு யாருசாமி! புதுசாயிருக்கே!"

"இவன்தாண்டா! உங்க சின்ன எச மான், மதுரையிலிருக்கிறுனே என் பிள்ளை அவன் மகன்" என்ருர்.

அன்று முழுவதும், புதுக் குடிக் குடியானவர்கள் 'சின்ன எஜமானைப் பாக் கணும் பாக்கணும்' என்று வந்தார்கள்.

எதிராத்திலிருந்த ஒரு அய்யர் மாத் திரம் என்னை ஒரு மாதிரி விறைத்துப் பார்த்தார். பின்னுல் தான் எனக்கு கார ணம் தெரிந்தது.

சாயங்காலமாய் நானும் தாத்தாவும் வெளியே நிலங்களைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். தாத்தா நன்ருய்த் தலைப் பாகை கட்டிக் கொண்டார். பூனூலை எடுத்துக் காதில் மாட்டிக்கொண்டார். கையில் வெள்ளிப் பூண் பிடித்த ஒரு கைத்தடி சகிதமாய்ப் புறப்பட்டார்.

பாதிவழி சென்றிருப்போம். "அடடே! பொடி டப்பியை எடுக்க மறந்துட்டேன். (இடுப்பைத் தடவிக்கொண்டார்.) மாட் டுக்குத் தண்ணி காமிச்சிண்டிருக்கும் போது டப்பியை மாடக்குழியில் வச்ச ஞாபகமாயிருக்கு. அம்பி! அதைப்போய் எடுத்துண்டுவா!" என்ருர்.நானும் ஓட்ட மாய் ஓடிச் சென்று பொடிடப்பியை எடுத் துக்கொண்டு வந்து கொடுத்தேன்.

ஒவ்வொரு நிலமாய்க் காண்பித்துக் கொண்டே வந்தார்.

"டே! அதோ பார்! அம்பி! அந்த நிலத்தில் இந்த வருஷம் கொஞ்சம் சுமார் விளைச்சல். போனவருஷம் மழையில்லே! மண்ணடிச்சு இருக்கு. ஒரே கரிசல் காடாய்க் கிடந்தது" என்ருர்.

"என் தாத்தா! மழை பெய்யா விட் டால் கிராமத்தில் ரொம்ப சிரமப்படுவீர் களே" என்று கேட்டேன். "அதையேன் சொல்றே! போன வரு ஷம் ரொம்ப சிரமமாப் போச்சு. உங்க மதுரையின்னு பாத்துக்கிண்டியோ! குழா யைத் திருகினதும் தண்ணி வரத்துக்கு" என்ருர்.

வரப்பு மேடுகள் வழியே சென்று கொண்டிருந்தோம். தவளைகள் இராகம் பாடிக் கொண்டிருந்தன. நண்டுகள் வளைக்குள் நுழைவதும், வெளியில் வரு வதுமா யிருந்தன. "நொய்" என்ற சப்தம்.

இதற்குள் பனங்காட்டிற்கு வந்து விட் டோம். "யாருடா மரத்திலே! ஆண்டித் தேவனு! நுங்குக்குலை வெட்டிச் சாத்துடா நம்ப பேரப் புள்ளைக்கு" என்று கூவி னுர்.

குலை, குலையாய்ச் சாத்திவிட்டான் ஆண் டித்தேவன். எனக்கோ குடிக்க முடியவு மில்லை...குடிக்கவுந் தெரியவில்லை. நான் ஒரு நுங்கு குடிப்பதற்குள், தாத்தா நுங் குக் கண்ணில் கட்டைவிரலை விட்டுக் கொண்டு "விறுட், விறுட்" என்று ஐந் தாறு நுங்குகளைக் குடித்து விட்டார்.

இரவு எட்டு மணி யிருக்கும். நான் வெளித் திண்ணையில் உட்கார்ந்தேன். தாத்தா வெளியே கட்டிலை (பாதி அறுந்து போன கயிருேடு கூடிய கட்டில்) போட் டுக் கொண்டு, ஜமக்காளத்தை விரித்து 'அப்பாடி' என்று சாய்ந்து கொண்டார்.

என்னை வெளித் திண்ணையில் படுத்துக் கொள்ளச் சொன்னுர். அமாவாசை இருட்டு மாதிரி யிருந்தது. எனக்கு மிக வும் பயமாயிருந்தது.

"என்ன தாத்தா! வெட்ட வெளியில் படுத்துக்கிறேள்! போதாக்குறைக்கு, வெளிக்கதவு, புடைக்கதவு எல்லாத்தை யும் 'விரீர்'ன்னு திறந்து வச்சுப்படுக்கி றேள். எவனுவது நுழைந்து, என்னத் தையாவது திருடிண்டு போனு? இப்படி வெளியில் காலை நீட்டிப் படுத்தா, எவனு வது 'சதக்' என்று ஒரு வெட்டு வெட் டினுன்னு என்ன பண்ணுவேள் இந்தக் குறவனும், மறவனுமிருக்கிற ஊரில்?" என்று கேட்டேன். "எனக்கு எவண்டா பகைவனிருக்கான்? நான் அப்படி ஒருத் தரையும் பகைச்சிக்க மாட்டேன். ஐயர் வாள், கணக்கப்பிள்ளையா யிருக்கிற வரை யும் ஒவ்வொத்தனும் கையெடுத்து கும் பிடுவான்கள்! என்னை என்ன அந்த

மடையன் சுப்பாணி அய்யருன்னு நினைச்சுக்கிண்டியா! அவனுக்கு ஊரில் இருக்கிறவா பூரா விரோதம்'' என்று தன்னை பெருமைப்படுத்திச் சொன்னார்.

"யாரு தாத்தா அந்த சுப்பாணி அய்யர்?''

"எதித்தாத்துலே இருக்கான் பாரு அந்தத் தடியன் தான். போன வருஷம் மழை பெய்யலே. குளங் குட்டைகளில் எல்லாம் வறண்டு போச்சு. பக்கத்திலே இருக்கே இந்த ஊருணியில் தான் கொஞ்சம் ஜலங் கிடந்தது. அந்தச் சுப்பாணி அய்யர் என்னடான்னு, நாங்கதான் (பிராமணர்கள் தான்) தண்ணி எடுப்போம்! வேறு யாரும் காலே வைக்கக் கூடாது'' என்று ஆரவாரம் பண்ணினான்.

"அதுவும் பள்ளன் பறையன் கிட்ட வரக்கூடாது'' என்று நாலஞ்சு பிராமணர்களைச் சேர்த்துக்கொண்டு, தண்ணி எடுக்க வரவன்களைக் கல்லே விட்டு எறியச் சொன்னார்.

எனக்கு மிகவும் பரிதாபமாயிருந்தது. பாவம்! அவங்க என்னடா பண்ணுவான்கள்? ஜலம் வேறு இடத்திலே கிடையாது! அவங்களும் நம்மமாதிரி தானேன்னுட்டு ஜலம் எல்லாரும் எடுத்துக்கலாம் என்று சொல்லி விட்டேன். ஊர்க் கணக்குப் பிள்ளை சொன்னால் கேட்கவா வேணும்!? என்னை வாயாரப் புகழ்ந்தான்கள். பள்ளன் பறையன் எல்லாரும் தண்ணீர் மொண்டுண்டு போனான்கள். அதிலிருந்து நமக்கும் சுப்பாணி அய்யருக்கும் பேச்சு வார்த்தை கிடையாது. அவர்மேல் இருந்த காட்டத்தில் தான், போனவருஷம் ஊரான்கன் அவருடைய தாயார் காதை அறுத்துண்டு போயிட்டான்கள்'' என்று முடித்தார்.

"காதை அறுத்துண்டு போயிட்டான்களா?'' என்று கொட்டாவி விட்டுக்கொண்டு வினவினேன்.

அன்று இரவு என் காதை யாரோ பிடித்து அறுப்பது போல் கனவு கண்டு அலறினேன். மறுநாளே மூட்டையைக் கட்டிவிட்டேன் மதுரைக்கு.





# வைடோ பெர்ரின்

TRADE ITL MARK

வைடமின் குறைவு, இரத்த மின்மை, பலஹீனம் முதலிய வற்றிற்கு

## சிறந்த டானிக்

மிகவும் இனிமையானது. மால்ட் சத்தும், தேனும் சேர்த்துச் செய்யப் பட்டது. வைடமின்கள் ஏ, பி, டியும் அயமும் கொண்டது

**கவர்ன்மெண்ட் இண்டஸ்ட்ரீயல் & டெஸ்டிங் லெபாரடரி**

மல்லேஸ்வரம் :: பெங்களூர்

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:

**மெஸர்ஸ் பெஸ்ட் & கோ.,**

த. பெ. 63 :: மதராஸ்

# குவலயானந்த ஸுபாஷிதம்

## (19-5-40 பாரதமணி முத்தின் தொடர்ச்சி)

(ய. மஹாலிங்க சாஸ்திரி, அண்ணாமலை நகர்)

இந்த இயற்கை வர்ணனையின் த்வனியைக் கவனிக்கவேண்டும். இரவு இருள் மூண்டது. பயத்திற்கு ஆஸ்பதமானது. கடத்தக் கடினமான காலம். இக்காலத்தில் சிறைப்பட்டிருக்கும் வண்டு மனப்பால் குடிக்கின்றது. தன் பரிதாப நிலையினின்று மீண்டு நற்காலத்தை—ஒளி வீசும் காலத்தை—ஆபத்துக்கள் நீங்கித் தான் விடுதலையடையும் காலத்தை—எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறது. இரவு கடக்காதா? பொழுது விடியாதா? கதிரவன் உதிக்க மாட்டானா? தாமரை மலராதா? நான் விடுபடையமாட்டேனா? என்று மனத்தைத் தேற்றிக்கொண்டு தற்காலத்திய துக்க நிலையை பொறுத்துக்கொண்டிருக்கிறது. கஷ்டத்தை அனுபவிக்கும் யாருக்குத்தான் நற்காலம் பிறக்குமென்று சபலம் இராது? சீதை ஹநுமானிடம் விளம்பியபடி ["ஏதி ஜீ வந்தமானந்தோ நரம் வர்ஷ சதாதபி"] "உயிருடன் மட்டுமிருந்தால் நூறுவருஷங்கள் கழித்தாகிலும் மனுஷ்யன் துக்கம் கடந்து சுகத்தை யடைவான்" என்பது அநுபவஸித்தம். தமிழிலும் 'முப்பது வருஷம் வாழ்ந்தவருமில்லை. முப்பது வருஷம் தாழ்ந்தவருமில்லை' என்று ஒரு பழமொழி உண்டு. இந்த நியாயப்படி காலக் கொடுமையினால் வருந்துபவர் நற்காலத்தை எதிர்பார்ப்பது சகஜம். ஆனால் தெய்வம் என்று ஒன்று இருக்கிறது. நாம் ஒன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கும் என்று கேட்டதில்லையா? கஷ்டப்படுபவர் எல்லோரும் கஷ்டம் தீர்ந்து சுகிக்கிறார்கள் என்று உலக வாழ்வில் ஓர் விதத் திட்டம் ஏற்பட்டிருப்பதாய்த் தெரியவில்லை. கஷ்டம் வெடியாமலே மனப்பால் குடித்த வண்ணம் உயிர் துறக்கும் பரிதாப நிலை, எவ்வளவு மாந்தர்கட்கு ஏற்பட்டு விடுகிறது? என்றும் சுகத்தையே நாடும் மனிதன் மனக்கோட்டை கட்டுகிறான். தெய்வம் அவனுக்கு அனுகூலமில்லாவிட்டால் ஒரு நிமிஷப் பொழுதில் அக்கோட்டையைச் சிதற அடித்து விடுகிறது. இவ்விதம் தெய்வத்தின் ஆக்ஞையின் கீழ் குடியிருக்கும் நமக்கு இயல்பாயுள்ள பரிதாப நிலையைப் புகட்ட எண்ணிக் கவியானவர் வண்டின் திருஷ்டாந்தத்தை வர்ணித்துள்ளார். 'என் கஷ்டம் விடியாதா' என்று மனிதன் புலம்புகிறான். வண்டும் 'விடியாதா' என்றுதான் காத்துக் கிடந்தது!

விடியற்காலத்தை எதிர்பார்த்து இருந்த வண்டின் கதி என்னவாயிற்று? சூரியன் புறப்பட்டுத் தாமரையை விகஸிக்கச் செய்யும் முன் மதயானை ஏரியில் புகுந்து தாமரையைப் பிடுங்கிக்கரையில் போட்டுக் காலால் தேய்த்து த்வம்சம் செய்துவிட்டது. நாளைக்கு வருவதை இன்று யார் சொல்லமுடியும்? எவ்வளவோ காரியங்கள் செய்ய வேண்டுமென்று சங்கல்பம் செய்து கொண்டிருப்பினின் சூரல்வலையைப் பிடித்து யமன் திடீரென்று இழுத்துக்கொண்டு போய்விடுகிறான். ஒரு கணப் பொழுதில் நாடு, வீடு, பாடு எல்லாம் மறைந்து சுடுகாடே உண்மையாய் விடுகிறது. இதுவே மானிட வாழ்க்கையின் தத்வம் என்று போதிக்கிறார் கவி.

## நீங்கள் வாசிக்க!

திரு. வி. கலியாணசுந்தரனுர் இயற்றிய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெரிய புராணம்—அரும்பத ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும் | 7 | 0 |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் | 2 | 8 |
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் | 2 | 0 |
| நாயன்மார் வரலாறு | 1 | 8 |
| தமிழ்ச் சோலை அல்லது கட்டுரைத் திரட்டு—இரண்டு பகுதி | 3 | 0 |
| சைவத் திறவு | 0 | 8 |
| தமிழ் நாடும் நம்மாழ்வாரும் | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானவரும் | 0 | 4 |
| சித்த மார்க்கம் | 0 | 6 |

**சுவேதாரண்ய ஆசிரமம் புத்தக சாலை**

295, லிங்க செட்டி தெரு,

ஜி. டி. மதராஸ்.

## சிதம்பரம் டி. மு. கோர்ட்டு

O. P. 42/40

மனுதாரர்:—R. கிருஷ்ணசாமி அய்யர்
*Clerk, Indo-Commercial Bank, Madras.*

ஷை மனுதாரரால், காலஞ்சென்ற தன் தாயார் மங்களத்தம்மாளுக்கு சிதம்பரம் டி. மு. கோர்ட்டு O. S. 150/39 நடவடிக்கைப்படி சேரவேண்டிய கடன் துகையை ஷையாளால் 8-10-39ல் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிற உயில்படி வசூலித்தடைய தனக்கு வார்சு சர்டிபிகேட் கொடுக்கும்படி மனு கொடுக்கப்பட்டு ஷை மனு 26-7-40ல் ஈரங்கி வைக்கப்பட்டிருக்கிற விபரம் இதனுல் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

S. அருணசல அய்யர்,
மனுதார் வக்கீல்.

## நீங்கள் வாசிக்க!

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| தேச பக்தன் கந்தன் | | கே. எஸ். வேங்கடரமணி, எம்.ஏ., பி.எல். | 1 | 0 |
| முருகன் ஓர் உழவன் | (மொழிபெயர்ப்பு) | கிருஷ்ணகுமாரி | 1 | 8 |
| இரட்டை மனிதன் | ,, | ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன் | 0 | 8 |
| துர்க்கேசநந்தினி | ,, | ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன் | 1 | 4 |
| விஷ விருக்ஷம் | ,, | ஸ்ரீ டி. என். குமாரஸ்வாமி | 1 | 8 |
| மாயா விநோதினி | ,, | ஸ்ரீமதி தஞ்சம் | 1 | 8 |
| ரஜனி | ,, | ஸ்ரீ எஸ். குருஸ்வாமி | 0 | 12 |
| மாதங்கினி | ,, | ஸ்ரீ டி. என். குமாரஸ்வாமி | 1 | 0 |
| குமுதினி | ,, | ஸ்ரீமதி ரங்கநாயகி | 1 | 8 |
| மாகாண சுயாட்சி | | ஸ்ரீ ஏ. என். சிவராமன் | 0 | 8 |
| முக்கிய அரசியல் திட்டங்கள் | | ஸ்ரீ ந. ரா. சுப்பையர் | 1 | 8 |
| ஹிட்லரும் மஹா யுத்தமும் | | ஸ்ரீ ஏ. ஜி. வெங்கடாச்சாரி | 1 | 4 |
| பாஸிஸ்டு ஜடாமுனி | | ஸ்ரீ சோ. விருத்தாசலம் | 1 | 8 |

(ஆர்டர்களுடன் முன் பணம் அனுப்பவேண்டும்)

**சுவேதாரண்ய ஆசிரமம்,** 7, வடக்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை.

சிறுவன் எழுதியது.

# சிறுவர்களின் சாமர்த்தியம்

(கே. எஸ். ராமானுஜம், கும்மட்டித்தடல்)

முன் ஒரு காலத்தில் புதுக்காடு என்னும் கிராமத்தில் வேலன் என்னும் ஒருவன் விவசாயத்தினுலும் வேட்டையினுலும் ஜீவனம் செய்து வந்தான். அவனுக்கு இரு குமாரர்கள் இருந்தனர். வேலனுக்கு அவர்களை வேட்டையில் சமர்த்தர்களாக்க வேண்டு மென்ற ஆசை இருந்தது.

ஆகையால் தினமும் அவர்களுக்கு கவண்டு கொடுத்து, பக்கத்திலுள்ள காட்டிற்குப்போய் பக்ஷிகளை வேட்டையாடி வரும்படி அனுப்பிவந்தான். அச் சிறுவர்களுக்கும் வேட்டையாடுவதில் பிரியம் இருந்து வந்தது.

இது நிற்க, காட்டிற்குப் பக்கத்திலிருந்த ஒரு மலையின் குகையில் ஒரு ராக்ஷஸன் தன் மனைவியுடன் வசித்து வந்தான். தினமும் அந்த ராக்ஷஸன் இவர்கள் வேட்டையாடும் காட்டிற்கே வந்து பக்ஷிகள், மிருகங்கள் முதலியவைகளை வேட்டையாடி எடுத்துக்கொண்டு வீடு செல்லுவான்.

ஒரு நாள் இச் சிறுவர்கள் வேட்டையாடச் சென்றிருந்தபோது ஒரு குயிலின் குரல் ஓர் ஆலமரத்தின் மீதிருந்து வந்தது. உடனே பெரியவன் "தம்பி, நீ அப்பக்கமாக வா, நான் இப்பக்கமாக வருகிறேன்" என்ருன். சரி என்று ஒத்துக்கொண்டு இருவரும் ஆலமரத்தைச் சுற்றி வந்தனர். அங்கு ஒரு பெரிய ராக்ஷஸனைக் கண்டவுடன் பிரமித்துப் போய் விட்டனர். உடனே ராக்ஷஸன் அவர்களைத்தூக்கித் தன் அம்புருப்பையில் போட்டுக் கொண்டு தன் வீட்டிற்குச் சந்தோஷத்துடன் நடக்க ஆரம்பித்தான்.

பிறகு தான் சிறுவர்களுக்கு, அந்த ராக்ஷஸன்தான் குயில் போல் கத்தினன் என்று தெரிய வந்தது.

எப்பொழுதும் அச்சிறுவர்க்ளில் பெரியவன் தன் இடுப்பில் ஓர் கூர்மையான கத்தி வைத்திருப்பான். ராக்ஷஸன் காட்டில் நடந்து செல்லும்போது அவன் உடம்பில் கிளைகளும் இலைகளும் பட்டுப் பேரிரைச்சலை உண்டாக்கின. அச்சமயம் சிறியவன் பெரியவனிடம் "அண்ணு, நீ இடுப்பில் ஒரு கத்தி சொருகி வைத்து இருக்கிருய் அல்லவா? அதனுல் இப்பையில் ஒரு ஓட்டை செய். இப்பொழுது கிளைகள் வெகு இரைச்சல் போடுகின்றன. நாம் குதித்துத் தப்பித்துக் கொள்ளலாம்" என்ருன். அதன்படியே அண்ணன் ஒரு ஓட்டை செய்தான். இருவரும் குதித்தார்கள். ஆனுல் ராக்ஷஸனுக்கு இவர்கள் இருந்தது பளுவாக இருந்திராததால் அவர்கள் குதித்ததும் தெரிய வில்லை.

ராக்ஷஸன் வீட்டிற்குச் சென்று தன் மனைவியிடம் "நான் இன்று உனக்கு நல்ல பக்ஷணம் கொண்டு வந்திருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே அம்புருப்பையை அவளெதிரில் வைத்தான். அதில் ஓட்டையைத் தவிர வேறென்றும் இருக்க வில்லை.

ஆகையால் சிறுவர்களாகிய நாம், ஒரு போதும் தைரியத்தைக் கைவிடக் கூடாது.

இடைவிடாத முன்னேற்றம் ஓங்கி வரும் கீர்த்திக்கு ஓர் அறிகுறி!

# நியூ எஷியாடிக்

## லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

இதன்—6-வது வருஷத்தில் பூர்த்தி
யான இன்ஷூரன்ஸ் புள்ளி விவரம்

**1939-ல் ரூ. 50 லக்ஷத்திற்கு மேல்**
**1938-ல் ரூ. 41·74 லக்ஷம்**

மானேஜிங் ஏஜண்ட்ஸ்: **பிர்லா பிரதர்ஸ் லிமிடெட்**

நீங்கள் இன்ஷூர் செய்யவோ அல்லது பிரதிநிதி
களாக யிருக்கவோ ஏற்ற சிறந்த கம்பெனி இது.

விவரங்களுக்கு எழுதவும்:

மதராஸ் பிராஞ்சு:

**ஏ. சுப்பையா** பிராஞ்சு மானேஜர்

289, லிங்க செட்டித் தெரு, ஜி. டி. மதராஸ்.

## BOOKS FOR ALL

**Books by K. S. Venkataramani**

| | Rs. | A. |
|---|---|---|
| Jatadharan & other Stories | 1 | 8 |
| Paper Boats | 1 | 0 |
| Kandan the Patriot | 2 | 0 |
| Cat - guts, by Manjeri S. Iswaran | 0 | 12 |
| Love of Dust by Shankar Ram | 3 | 0 |
| India's Road to Socialism by K. Santanam M.L.A. (Cen.) | 1 | 0 |
| Three Men of Destiny by A. S. P. Iyer I.C.S. | 3 | 0 |

**Books by S. V. V.**


| | | |
|---|---|---|
| Soap Bubbles | 1 | 0 |
| Much daughtered | 1 | 0 |
| A Holiday Trip | 1 | 0 |

**Svetaranya Ashrama Book-Shop,**
295, Linghi Chetty Street,
G. T., MADRAS.

## நீங்கள் வாசிக்க

| | ரூ. | அ. |
|---|---|---|
| தேசபக்தன் கந்தன் (கா. சி. வேங்கடரமணி) | 1 | 0 |
| கணையாழியின் கனவு, தியாகபூமி (கல்கி) | 2 | 0 |
| சந்திரிகா (குகப்ரியை) | 0 | 12 |
| மங்கையர்க்கரசியின் காதல் (வ. வே. சு. ஐயர்) | 0 | 12 |
| சந்தனக்காவடி முதலிய கதைகள் (தி. ஜ. ர) | 0 | 12 |
| கனகாம்பரம் முதலிய கதைகள் (கு. ப. ரா.) | 0 | 12 |
| புதுமைப் பித்தன் கதைகள் | 2 | 0 |
| கம்பன் கவிதை (17 ஆசிரியர்கள் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்) | 1 | 8 |

**ஸ்வேதாரண்ய ஆசிரம புத்தகசாலை,**
295, லிங்க செட்டி தெரு, மதறாஸ்.




# நட்பின் பெருமை

[ஜி. கிருஷ்ணமூர்த்தி, மாயவரம்]

முன்னொரு காலத்தில் பாரசீகத்தில் டேமன் என்றும் பீதியஸ் என்றும் இரு நண்பர்கள் இருந்தார்கள். அவர்களிருவரும் இணைபிரியாத சினேகிதர்கள். ஒரு சமயத்தில் அந்தத் தேசத்து அரசனுக்கு டேமனிடத்தில் ஏதோ ஒரு காரணத்தால் கோபம் உண்டாயிற்று. உடனே அவன் டேமனை தூக்கிலிட உத்தரவிட்டான்.

ஆனால் டேமன் இதற்கு பயப்படவுமில்லை, வருந்தவுமில்லை. ஏனென்றால் அவன் உண்மையில் ஒரு குற்றமும் செய்யவில்லை. அவன் அரசனிடத்தில் "அரசே! நான் இறப்பதற்குப் பயப்படவில்லை. ஏனென்றால் நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. ஆனால் தாங்கள் என்னுடைய ஒரு வேண்டுகோளுக்கு மாத்திரம் தயவு செய்து இணங்க வேண்டும். நான் இறப்பதற்கு முன்னால் என்னுடைய மனைவி மக்களை ஒரு தடவை பார்க்க விரும்புகிறேன். அதற்காகத் தாங்கள் எனக்கு இரண்டு நாள் அவகாசம் கொடுக்க வேண்டும். இன்றைக்கு மூன்றாவது நாள் காலை கட்டாயம் திரும்பிவிடுகிறேன். தயவு செய்து இந்த வேண்டுகோளை மாத்திரம் அனுமதியுங்கள்" என்று வணக்கமாகக் கேட்டுக் கொண்டான்.

ஆனால் அரசன் இதற்குச் சம்மதிக்கவில்லை. "உனக்குப் பதிலாக வேறொருவனை ஜாமீனாக வைத்து விட்டுச் செல். குறிப்பிட்ட நேரத்தில் நீ வரத் தவறினால் உனக்குப்பதிலாக இருப்பவன் தூக்கிலிடப்படுவான்" என்று சொன்னான். ஆனால் டேமனுக்குப் பதிலாக ஜாமீனாக இருக்க ஒருவரும் முன் வரவில்லை.

இவ்விஷயம் பீதியஸ் காதில் விழுந்தது. அவன் உடனே தன் நண்பனுக்கு உபகாரம் செய்ய எண்ணி அரசனிடம் வந்து தான் டேமனுக்குப் பதிலாக இருப்பதாகவும் டேமனை விடுவிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டான். அரசன் ஆச்சர்யம் மேலிட்டவனாய், "என்ன? உனக்கு உயிரின் மேல் ஆசையில்லையா?" என்று வினவ, அதற்குப் பீதியஸ், "நட்பானது, பணம், உயிர் இவைக் காட்டிலும் மேலானது" என்று தைர்யமாகக் கூறினான். அதைக் கேட்டு அரசன் அவனுடைய வேண்டுகோளுக்கிணங்கி அவனைக் காவலில் வைத்தான். டேமனும் உடனே தன் ஊர் சென்று வருந்திக் கொண்டிருந்த தன் மனைவி மக்களைத் தேற்றினான்.

இன்று மூன்றாம் நாள். பொழுது விடிந்து மணி எட்டாகி விட்டது. பத்தும் ஆகிவிட்டது. பதினொன்றும் ஆகிவிட்டது. ஆனால் டேமனைக் காணவில்லை. அவனைப் பற்றிய சமாச்சாரமொன்றும் தெரியவில்லை. ஆகவே அரசன், நிபந்தனைப்படி பீதியஸைத் தூக்கிலிட உத்தரவு கொடுத்தான். கொலையாளிகள் பீதியஸை அழைத்துச் சென்றார்கள். சில ஜனங்கள் பீதியஸை பிறருக்காகத் தன் உயிரைக் கொடுக்கும் முட்டாள் என்று தூஷித்தார்கள். சிலர் டேமனைத் தந்திரக்காரனென்று வைதார்கள். ஆனால் பீதியஸ் இதற்காக வருத்தப்படவில்லை. அவன் உண்மையில் டேமன் உயிர் தப்பினால் போதும் என்றே நினைத்தான்.

மணி பன்னிரண்டு ஆயிற்று. பீதியஸ்

தூக்குமேடையில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். அவனுடைய நிலைமையைப் பார்த்து எல்லோரும் கண்ணீர் விட்டனர். ஆனால் பீதியஸ் கொஞ்சங்கூட மனம் தளரவில்லை. அரசனின் உத்திரவின்பேரில் அவன் கழுத்தில் கயிறு மாட்டப்பட்டுவிட்டது. கொலையாளிகளும் கயிற்றை இழுக்க ஆரம்பித்தனர். இன்னும் ஒரு க்ஷணநேரத்தில் பீதியஸ்ஸின் உயிர் பிரியப்போகிறது!

இதற்குள் திடீரென்று "நிறுத்துங்கள், நிறுத்துங்கள். நானே இதோ வந்து விட்டேன்" என்ற குரல் கேட்டது. எல்லோரும் சப்தம் வந்த திக்கை நோக்கினர். டேமன் ஒரு குதிரையின் பேரில் வெகு வேகமாக வந்துகொண்டிருந்தான். அருகில் வந்தவுடன் அரசனை வணங்கித் தாமதத்திற்கு மன்னிப்பு கேட்டுக்கொண்டு பீதியஸை விட்டுவிட்டு தன்னைத் தூக்கிவிட வேண்டிக்கொண்டான். ஆனால் அரசன் மனம் இளகிவிட்டது. அவர்கள் இருவரின் நட்பைப்பார்த்து அரசன் ஆச்சர்யப்பட்டு, அவர்களிடம், "நீங்கள் உண்மைச் சினேகிதர்கள். உங்கள் நட்பு உலகத்திற்கே பெருமை யளிக்கக் கூடியது. நான் உங்களைத் தண்டிக்கப்போவதில்லை. நான் டேமனை மன்னித்துவிட்டேன். இன்று முதல் என்னையும் உங்கள் சிநேகிதனாக எண்ணுங்கள்" என்று சொல்லி அவர்களை விடுத்தான். ஜனங்கள் சந்தோஷத்துடன் உண்மை நட்பு இது தான் என்று கொண்டாடினார்கள்.

(ஓர் மேல் நாட்டுக் கதையைத் தழுவி எழுதியது)


**மோட்டார் ஆயுள் இன்ஷ்யூரென்ஸிற்கு**

# வான்கார்ட்

உங்கள் காரை இன்ஷ்யூர் செய்தீர்களா?
உங்கள் ஆயுளை இன்ஷ்யூர் செய்தீர்களா?

**வான்கார்ட்டில்**
**இன்ஷ்யூர் செய்யுங்கள்**

**வான்கார்ட் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி லிமிடெட்**

மவுண்டு ரோட், மதராஸ்.

Phone: 8558. Grams: VANGUARD.

# ஹாலந்தின் இந்தியத் தீவுகள்

சமீபத்தில் நாஜி அலைகள் போலந்து, நார்வே முதலிய மண் மேடுகளை அடித்துக் கரைத்தது போல ஹாலந்தையும் கரைத்துத் தன்னுள் அடக்கிக் கொண்டதைக் கண்ணாரக்காணவிட்டாலும் காதால் கேட்டோம். பிரிட்டிஷ், பிரஞ்சு நாடுகளுக்கு உலகில் பலவிடங்களில் ஆளப்படும் பூமிகள் இருப்பதே போல, ஹாலந்துக்கும் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் இந்தியத் தீவுகள். தற்சமயம் இத்தீவுகளைப்பற்றித் தேசிய உலகில் கடுமையானபேச்சு நடந்து கொண்டிருக்கிறது. ஆதலால் இதைப்பற்றிய விஷயங்களைத் தெரிந்து கொள்வது அவசியம்.

ஹாலந்து இவற்றை முந்நூற்றைம்பது வருஷகாலமாக தன் கைவசங்கொண்டு ஆண்டுவருவது ஆச்சரியப் படத்தக்க விஷயமே. இதற்குக் காரணம், இத்தீவுகளின் பல பக்கங்களிலும் இதற்கு நட்பாயும் அனுகூலமாயுமுள்ள அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகள் இருப்பதுதான்.

இத்தீவுகளினால் ஹாலந்துக்கு விளையக் கூடிய அனுகூலங்கள் பல. இங்கே உலகத்தில் மூன்றில் ஒரு பங்கு ரப்பர் உற்பத்தி செய்யப்படுகிறது. இது தவிர எண்ணெய் வகையறுக்களும் வெள்ளீயமும் சர்க்கரை, கொப்பரை, காபி, மற்றும் மீன் சரக்குகளும் ஏராளமாக இருக்கின்றன. இதனால் ஹாலந்துக்கு வருஷா வருஷம் நான்கு கோடி ரூ. வருமானம் வருகிறது. உண்மையில் இத்தீவுகளே ஹாலந்துக்கு அன்னமளிக்கிறது என்றே சொல்லவேண்டும். ஹாலந்து—ஒரு சிறிய தேசம்—இங்கேயுள்ள 6 கோடி ஜனங்களை அரசாண்டு வருகிறது.

ஹாலந்து இவ்விந்தியத் தீவுகளை முந்நூற்றைம்பது வருஷகாலமாக அரசாண்டு வருகிறது. காரணம் அவைகளுடைய அமைப்புத்தான் என்று முன்பு சொன்னோம். இது தவிர, இதற்கு ஆங்கில—டச்சுப் தேசியப் பொருளாதாரமும் ஓர் முக்கிய காரணமென்று கூறவேண்டும். இத்தீவுகளுடைய அமைப்பைச் சிறிது ஆராய்வோம். இத்தீவுகளுக்கு வடமேற்கே இந்தியாவும், பிரிட்டிஷ் மலாக்காவும், மேற்கே பிரிட்டிஷ் போர்னியோ, ஸாரவாக், ஆஸ்திரேலிய மாண்டேட் பிரதேசங்களும், தென் கிழக்கில் ஆஸ்திரேலியாவும், வட கிழக்கில் பிலிப்பைன் தீவுகளும், ஜப்பானிய மாண்டேட் தீவுகளும் நாற்புறங்களிலும் சூழ்ந்து கிடக்கின்றன. பூகோளத்தில் கூறுகிறபடி பசிபிக் மஹா சமுத்திரமும் இந்து மஹா சமுத்திரமும் கூடுகிற இடத்தில் இத்தீவுகள் அமைந்திருக்கின்றன. அங்கே தான் ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், சைனா முதலிய நாடுகளின் வியாபாரம், பொருளாதாரம் முதலிய சம்பந்தங்கள் ஏற்படுகின்றன.

ஐரோப்பாவில் மூன்று முக்கிய நதிகளான, ரைன், முயூஸ், ஷெல்ட், ஜெர்மனியிலும் பிரான்ஸிலும் ஓடி ஹாலந்து நாட்டின் வழியாகப் பாய்ந்து கடலில் சங்கமமாகின்றன. இதே போலத்தான் ஹாலந்தின் அரசாட்சிக்குட் பட்டிருக்கும் இந்தியத் தீவுகளும் ஹாலந்தின் கையிலிருப்பது பல நாடுகளுக்கு அனுகூலமாக இருக்கின்றது.

ஹாலந்து இன்றுவரை கீழ்க்கோடியில் ஓர் நாட்டை ஆண்டு வருவதன் காரணம் பிரிட்டனின் ஒத்தாசைதான் என்று கூறவேண்டும். பிரிட்டனுக்கும் ஹாலந்தும் இந்நேசப்பான்மை இல்லாதிருக்கும் பக்ஷத்தில் ஹாலந்து ஒரு நிமிஷங்கூட இங்கிருக்க முடியாது.

உலகப் படத்தில் இவ்விந்தியத்தீவுகளின் அமைப்பைப் பார்ப்போமானால், ஆஸ்திரேலிய கண்டத்திற்கும், ஆசியா கண்டத்திற்கும் இஃதோர் பாலமென்றே தோன்றும். இது தவிர, பசிபிக் மஹா சமுத்திரத்தையும், இந்து மஹா சமுத்திரத்தையும் பிரித்து வைக்கும் ஓர் கடற் கோட்டை யென்றே சொல்லவேண்டும்

இத்தீவுகள் பொருளாதார விஷயத்தில் எவ்விதம் மற்ற நாடுகளுடன் உறவு கொண்டாடுகிறது எனப் பார்ப்போம். இப் பொருளாதார விஷயத்தில் இங்கிலாந்துக்குத்தான் அதிகச் சலுகைக கொடுத்திகிறது. விவசாயத்தில் ஹாலந்து 74 சத விகிதமும், இங்கிலாந்து 13 சத விகிதமும், அமெரிக்கா 25 சத விகிதமும், ஜப்பான் 9 சத விகிதமும் பங்குகள் எடுத்துக்கொண் டிருக்கின்றன. அத்தீவுகளுடன் வியாபாரத்திலும் பிரிட்டனுக்குத்தான் அதிகச் சலுகைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இறக்குமதியில் பிரிட் 23·4 சத விகிதமும், ஹாலந்து 19·1 சத விகிதமும், அமெரிக்கா 10 சத விகிதமும், ஏற்றுமதியில பிரிட்டன் 31·8 சத விகிதமும், ஹாலந்து 19·2 சத விகிதமும், அமெரிக்கா 18·9 சத விகிதமும், ஜப்பான் 4·5 சத விகிதமும் பங்குகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன.


## ஒரு நிமிஷம்!

★ மனதைக் கவரும் இனிய கதைகள்

★ அறிவை யூட்டும் அழகிய கட்டுரைகள்

# பாரத மணி

● வருஷ சந்தா
உள்நாடு ரூ. 4
வெளிநாடு ரூ. 6

● நீங்கள் உங்கள் சந்தாவை அனுப்பிவிட்டீர்களா ?

❋ தனிப் பிரதி விலை ஒரு அணா. ❋

**இன்றே சந்தாதாரராய்ச் சேருங்கள்.**